விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 30 வியாழக்கிழமை (13.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 145

## வடக்கை மிரட்டும் கொரோனா வைரஸ்

### மேலும் இருவர் உயிரிழப்பு 82 பேருக்கு தொற்று உறுதி



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் கொரோனா வைரஸ் கட்டுக்கடங்காமல் பரவி வருகின்றது. கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் இருவர் வடக்கில் உயிரிழந்துள்ளனர்.

நேற்றும் யாழ்.மாவட்டத்தில் 67 பேர் உட்பட வடக்கில் 82 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

எதிர்வரும் 31ஆம் திகதி வரை

## இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை

### நாடு முழுவதும் பயணக் கட்டுப்பாடு

(கொழும்பு)

இன்று இரவு முதல் எதிர் வரும் 31ஆம் திகதி வரை தினமும் இரவு 11 19

## குழந்தை பிரசவித்த தாய் உயிரிழப்பு

### யாழ்.போதனாவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் மகப்பேற் றுக்காக அனுமதிக்கப் 19

### 15 பேருடன் பதிவுத் திருமணம் செய்ய அனுமதி

(கொழும்பு)

நாடு முழுவதும் 19

இன்று இரவு முதல் திங்கள் அதிகாலை வரை

நாடு முழுவதும்

## மக்கள் நடமாட கட்டுப்பாடுகள்

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



(கொழும்பு)

நாடு முழுவதிலும் இன்று இரவு 11 மணி முதல் எதிர்வரும் 17ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையில் தொடர்ச்சியாக நடமாட கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த சாதாரண ஊரடங்கு (Similiar to a Curfew) உத்தரவு காலத்தில் எவரும் வீடுகளை விட்டு வெளியேற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் குறிப்பிட்டார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

வெள்ளிக்கிழமை

### நோன்பு பெருநாள்

(கொழும்பு)

முஸ்லிம்களின் நோன்பு பெருநாள் நாளை வெள்ளிக்கிழமை 19

### யாழில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 50 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் தனி மைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 50 பேர் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவருக்கும் நீதி மன்றில் வழக்குத் தாக் கல் செய்யப்படும் என்று 19

யாழ்.பல்கலைக்கழக

### 31 வவுனியா வளாக மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி

(வவுனியா)

வவுனியா பம்பைமடுவில் உள்ள யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் 31 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, பம்பை மடுவில் அமைந்துள்ள 19

### கொரோனா +2,429

(கொழும்பு)

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் +2,429 பேர் நேற்று அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச் சின் தொற்று நோயி 19

## முள்ளிவாய்க்காலில் நினைவுக் கல்

### பொலிஸ், இராணுவம் குவிக்கப்பட்டதால் பதற்றம்

(முள்ளிவாய்க்கால்)

முள்ளிவாய்க்கால் மண்ணில் கொல்லப்பட்ட மக்களுக் காக பொது நினைவுக் 19

### சங்குப்பிட்டி பிள்ளையாரை அகற்றுவதற்கு அதிகாரிகள் முயற்சி

(யாழ்ப்பாணம்)

பூநகரி - சங்குப்பிட்டி பகுதியில் அமைக்கப்பட் டிருக்கும் பிள்ளை யார் சிலையை 19

யாழ்.கச்சேரியடியில்

## 4 மாத குழந்தை திடீரென உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சேரியடி யைச் சேர்ந்த 4 மாதக் குழந்தை ஒன்று அதிகாலை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம் கச்சேரி வீதி யில் வசிக்கும் தாயார் ஒருவருக்கு கடந்த 4 19

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 200 கர்ப்பிணிப் பெண்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான 200 கர்ப்பிணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று, சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான கர்ப்பிணிகளை, கொழும்பு தேசிய வைத்தியசாலை, போதனா வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகளில், தனித்தனியே வார்ட்டுகளை உருவாக்கி சிகிச்சையளிக்குமாறு, சுகாதார அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில், மேற்படி வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கு, சுகாதார அமைச்சினால் சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், கர்ப்பிணிகளுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றுவது தொடர்பிலும் சுகாதாரத் துறையினர் பேச்சுவார்த்தை நடத்தி வருவதுடன், அது தொடர்பான அறிவிப்பு விடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-03)

## தமிழகத்திலிருந்து கடல்வழியாக யாழ். குருநகருக்குள் நுழைந்த 4 பேர் தனிமைப்படுத்தலில்


(யாழ்ப்பாணம்)

தமிழகத்திலிருந்து கடல்வழியாக யாழ்.குருநகருக்கு வந்திருந்த 4 பேர் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் பீ.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள சுகாதார பிரிவினர் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர்.

தமிழகம் ஈரோடு மாவட்டம் அரிச்சலூர் இடைத்தங்கல் முகாமில் வசித்துவந்த தாய், மகள் மற்றும் இரு குழந்தைகள் உட்பட 4 பேர் படகுமூலம் தமிழகத்திலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் குருநகர் பகுதிக்கு ஒரு சில நாட்களுக்குள் வந்துள்ளனர்.

குறித்த தகவல் வெளியான நிலையில் துரிதமாக செயற்பட்ட சுகாதார பிரிவினர் மற்றும் யாழ். பொலிஸார் குறித்த 4 பேரையும் அடையாளம் கண்டு தனிமைப்படுத்தியுள்ளதுடன், பீ.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதுடன், பரிசோதனை முடிவுகளின் பின்னர் மேல் நடவடிக்கை எடுப் பதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (ம-03)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின்
தமிழ்ப்பாட ஆசிரியர்
**திரு. கை. துஸ்யந்தன்**
அவர்களின்
பாசமிகு தந்தையார்
அமரர்
**ஐயம்பிள்ளை கைலாயநாதன்**
அவர்கள்
இறைபதமடைந்த செய்தி கேட்டுத்
துயரடைவதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-2152)

**ஆசிரியர் கழகம்**
**யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.**

# கொழும்பை உலுக்கும் கொரோனா ஒரே நாளில் 606 பேருக்கு வைரஸ் தொற்றுறுதியானது

(கொழும்பு)

கொரோனா 3ஆவது அலையின் தாக்கம் ஒட்டுமொத்த இலங்கையையும் அச்சுறுத்தி வரும் நிலையில் கொழும்பு மாவட்டத்தில் ஒரே நாளில் 606 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கொரோனா 3ஆவது அலை அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதை அடுத்து நாளுக்கு நாள் தொற்றுறுதியாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

அந்தவகையில் நேற்று முன்தினம் (மே-11) 2 ஆயிரத்து 568 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இவ்வாறு, நேற்றைய தினம் தொற்று உறுதியானவர்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளதாக கோவிட்-19 தொற்றைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 606 பேருக்கு கோவிட் 19 தொற்று உறுதியாகியுள்ளது.

அத்துடன் அநுராதபுரத்தில் 90 பேரும், திருகோணமலையில் 23 பேரும், முல்லைத்தீவில் 24 பேரும், நுவரெலியாவில் 64 பேரும், வவுனியாவில் 5 பேரும் இனங்காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

## 31ஆம் நாள் நினைவில்...



மலர்வு 08 - 02 - 1944

உதிர்வு 13 - 04 - 2021

கடந்த 13.04.2021 ( புதன்கிழமை) அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

மொழிஞாயிறு

**சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்**

**[ ஆங்கில பேராசான் ]**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசி, ஊடகங்கள் மூலமும் மலர் வளையங்கள், அஞ்சலிப் பிரசுரங்கள், அஞ்சலிப் பதாதைகள் வாயிலாகவும் இறுதி அஞ்சலி நிகழ்வின் மூலமாகவும் அனுதாபங்களைக் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், கல்விச் சமூகத்தினர் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்றைய முப்பத்தோராம் நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கந்தமுருகேசனார் வீதி,**
**புலோலி தெற்கு, புலோலி.**

(6877)

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 - 07 - 1945



இறப்பு 12 - 05 - 2021

### திரு. சின்னத்தம்பி சோதிலிங்கம்

*யாழ். பொலிகண்டி கிழக்கு, கந்தவனக் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் யாழ். புலோலி தெற்கு, மூச்சம்புலமை வதிவிடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி சோதிலிங்கம் நேற்று (12.05.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பாக்கியம் (பொலிகண்டி) தம்பதியரின் இளையமகனும் காலஞ்சென்ற செல்லையா - பார்வதிப் பிள்ளை (புலோலி தெற்கு ) தம்பதியரின் அன்பு மருமகனும் பார்வதி தேவியின் அன்புக் கணவரும் ஐங்கரன் (பூசகர் - மூச்சம்புலம் சிவன் ஆலயம்), காலஞ்சென்ற சுதாகரன் (பூசகர் - மூச்சம்புலம் சிவன் ஆலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சின்னத்தம்பி முத்துலிங்கம் (புற்றளை), சச்சிதானந்தம் யோகாம்பிகையின் (பொலிகண்டி) சகோதரனும் ஜெகன், றமணன், பிரதாப், சுரேஸ் (புற்றளை) ஆகியோரின் சித்தப்பாவும் கௌரி சுதாகரன், சச்சிதானந்தம் ஸ்ரீகரன், ஆதிரை கலைமோகன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.05.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (புலோலி தெற்கு) காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

(C-2154)

**புலோலி தெற்கு,**
**மூச்சம்புலம்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் நினைவுகோரும் உரிமைக்கு மக்கள் பிரதிநிதிகள் குரல்கொடுக்க வேண்டும்

## பிரதேச சபை உறுப்பினர்

(நெளுக்குளம்)

**கொரோனா பரவலுக்கு மத்தியில் குருந்தூர் மலையில் புத்தரை அமர்த்தி விழா செய்கிறார்கள். ஆனால், இறுதிப்போரில் கொல்லப்பட்ட மக்களிற்கு அஞ்சலி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வவுனியா நகரசபை உறுப்பினர் பி.யானுஜன் தெரிவித்துள்ளார்.**

நேற்று இடம்பெற்ற சபை அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக சிறு பான்மையினருக்கு எதிரான அடக்குமுறைகள் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக அந்த இனங்களை பிரதிநிதித்து வப்படுத்தும் யாழ். மாநகர மேயர் மணிவண்ணன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் றிசாட பதியுதீன் போன்றவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தற்போது கொவிட் பரவலை முன்னிறுத்தி இறுக்கமான நடைமுறைகளை அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது. ஆயினும் அந்த விடயத்தில் சமத்துவம் பேணப்படவில்லை. குறிப்பாக அரச நிகழ்வுகள் இடம் பெற்ற வண்ணம் இருக்கின்றன.

நேற்று முன்தினம் இராணுவப் பாதுகாப்புடன் முல்லைத்தீவு குருந்தூர் மலையில் புத்தர் சிலை ஒன்றை நிறுவும் நிகழ்வு இடம்பெற்றது. அத்துடன் அண்மையில் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாக விகாரையில் நிகழ்வினை நடத்தினார்கள்.

மூ வினமக்களும் வாழ்கின்ற இந்தநாட்டிலேசிறுபான்மையினர் மாத்திரம் தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வருகின்றனர்.

இறுதிப்போரில் கொல்லப்பட்ட மக்களை நினைவு கூரி மே18 நாளை நாம் அனுஷ்டித்து வருகின்றோம். ஆனால் வழமைபோலவே அதனைநினைவு கூர்ந்தால் அனைவரையும் கைது செய்வோம் என அறிவித்துள்ளனர்.

கடந்தமுறை வீடுகளில் அனுஷ்டிக்குமாறு தெரிவித்தாலும் இராணுவத்தினர் வீடுகளுக்கு சென்று இடையூறுகளை ஏற்படுத்தியிருந்தனர்.

எனவே இறந்த உறவுகளை நினைவு கூருவதற்கான உரிமையை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திலும் வெளியிலும் எமக்காக குரல் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (5-4-299)

## தென்மராட்சி இலக்கிய அணியின் 'சிலம்பில் குறள் மாந்தர்' கருத்தரங்கம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் தமிழமுதம் கருத்தரங்கம் நிகழ்வு நாளை மறுதினம் 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இணையவழி நேரலையாக ThenmaradchillakkiyaAni எனும் இணைய வழியூடாக நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் இக் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது.

சிலம்பில் குறள் மாந்தர் எனும் தலைப்பில் நடைபெறும் இந்நிகழ்வில் மங்கல விளக்கினை ஓய்வு நிலை அதிபர் இ.ரவீந்திரன் தம்பதியர் ஏற்றிவைக்க கடவுள் வாழ்த்தினை வே. ஞானசம்பந்தன் நிகழ்த்த தலைமையுரையினை பேராசிரியர் க.கந்தசாமி ஆற்றவுள்ளார்.

கருத்தரங்கம் நிகழ்வில் "முறை செய்யா மன்னவன் பாண்டியன்" எனும் தலைப்பில் ச. மார்க்கண்டு, "மனைத்தக்க மாண்புடையள் கண்ணகி" எனும் தலைப்பில் ந.விஜயசுந்தரம்,"நிறைமொழி மாந்தர் கௌந்தியடிகள்" எனும் தலைப்பில் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் கருத்துரைப்பர்.(நி-4)

## தே.அ.அட்டையின் இறுதி இலக்க நடைமுறை மீண்டும் அமுல்

### பொலிஸார் அறிவிப்பு

(கொழும்பு)

பயணக் கட்டுப்பாடு அமுலில் இருக்கின்ற வேளையில், தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வெளியில் செல்லும் நடைமுறை அமுலாகவுள்ளது.


அதன்படி அத்தியாவசிய தேவைகளுக்காக வீட்டை விட்டுச் செல்லும் நடைமுறை இன்று வியாழக்கிழமை முதல் மே 31 வரை நடைமுறைக்கு வருகிறது.

எனவே அடையாள அட்டையின் இறுதி இலக்கமாக 0,2,4,6,8 ஐ கொண்டவர்கள் இரட்டை நாட்களில் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

இறுதி இலக்கமாக 1,3, 5,7,9 உள்ளவர்கள் ஒற்றை நாட்களில் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப் படுவார்கள் என அஜித் ரோஹண அறிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய பொலிஸ் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அடையாள அட்டை இல்லாதவர்கள் கடவுச்சீட்டு அல்லது வாகன சாரதி அனுமதிபத்திரத்தை பயன்படுத்த முடியும் என்றும் அறிவித்துள்ளார்.

வேலைக்கு செல்பவர்கள், அத்தியாவசிய சேவைகளை வழங்குபவர்கள் அல்லது மருத்துவ சேவைகளை வாங்குபவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் இந்த நடைமுறை பொருந்தாது என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதல் நாளான நேற்று யாழ்ப்பாணத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் - கொக்குவிலில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இந்த நினைவேந்தல் ஆரம்ப நாள் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

அஞ்சலி நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் சிலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். (படம்: சிவசாந்தன்)


## வெசாக் தினத்தை முன்னிட்டு நினைவு முத்திரைகள் வெளியீடு

(கொழும்பு)

தேசிய வெசாக் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு முத்திரை, முதல் நாள் உறை மற்றும் நினைவுப் பத்திரம் என்பன வெகுசன ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால் நேற்று அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் வழங்கப் பட்டது.

இம்முறை தேசிய வெசாக் தினம் வட மாகாணத்திலுள்ள வரலாற்று சிறப்புமிகுந்த நயினாதீவு ரஜமஹா விகாரையை மையமாகக்கொண்டு நடத்தப்படவிருந்தது.

அதன்படி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த விகாரைகளின் ஓவியங்கள் இந்த



ஆண்டு தேசிய வெசாக் தின நினைவு முத்திரைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா சுமலக்கஸ்கட விகாரை, யாழ்ப்பாணம் கதுறுகொட விகாரை மற்றும் வவுனியா கமடுகந்த தததா விகாரை ஆகிய வற்றை மையமாகக்கொண்டு முத்திரை வடிவமைப்பாளர் பாலிதா குணசிங்க இந்த நினைவு முத்திரைகளை வடிவமைத்துள்ளார்.

ரூபாய்த்து, ரூபாய்பதினைந்து மற்றும் ரூபாய் நாற்பத்து ஐந்து ஆகிய மதிப்பிலான மூன்று முத்திரைகள் இதன் போது வெளியிடப்பட்டன. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோகுலன், மதூஸன் அதிரடியால்
# ஸ்கந்தாஸ்ரார் வெற்றிக்கிண்ணம்-2021 2ஆவது சுற்றுக்கு கிறாஸ் கொப்பர்ஸ் தகுதி






ஸ்கந்தாஸ்ரார் வெற்றிக் கிண்ணம்-2021, 1ஆவது சுற்றில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி, T.C.C. அணியை 131 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி 30 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 258 ஓட்டங்களை பெற்றனர்.

கோகுலன், மதூஸன் 1 ஆவது விக்கெட் இணைப்பாட்டம் 119 ஓட்டங்களை பெற்றனர்.

இவ் இணைப்பாட்டம் இத் தொடரில் ஓர் சாதனையாக அமைந்துள்ளது.

கோகுலன்-79, மதூஸன்-32, டிலோஸன்-13, அஜித்-17, கிரிசான்-10, வரலக்ஸன்-55, சுஜீபன்-19, ஓட்டங்களை பெற்றுள்ளனர்.

களத்தடுப்பில் T.C.C சார்பாக சிவராஜ்-04, தீபநாதன்-2, சுரேந்திரன், சுஜன் தலா-01 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய T .C .C அணி 27.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 127 ஓட்டங்களை பெற்றுள்ளனர்.

தர்சிகன்-23, றொகான்-13, சுஜன்-24, சுரேந்திரன்-12, கிருத்திகன்-14 ஓட்டங்களை பெற்றுள்ளனர்.

களத்தடுப்பில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி சார்பாக ஜனன்தன்-03, அஜித், கிரிசான், மயூரன் தலா 02 இலக்கினை கைப்பற்றியுள்ளனர்.

இப் போட்டியின் மூலம் கிறாஸ் கொப்பர்ஸ் அணி 7.89 புள்ளிகளையும் T.C.C அணி 1.35 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.

இப் போட்டியில் சிறந்த வீரராக கோகுலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (4-6)

# பங்களாதேஷ் ஒருநாள் தொடருக்கான இலங்கை அணி அறிவிப்பு



பங்களாதேஸுக்கு கிரிக்கெட் சுற்றுலா மேற்கொள்ளவுள்ள இலங்கை கிரிக்கெட் குழாத்துக்கான அனுமதியை விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் வழங்கியதாக விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அனுராத விஜேகோன் தெரிவித்தார்.

எதிர்வரும் 16 ஆம் திகதியன்று இலங்கை கிரிக்கெட் குழாம் பங்களாதேஷ் நோக்கி பயணமாகும் இலங்கை அணி பங்களாதேஷ் அணியுடன் 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் தொடரில் பங்கேற்கவுள்ளது.

இலங்கை அணித் தலைவராக செயற்பட்டு வந்த திமுத் கருணாரட்ண மற்றும் முன்னாள் தலைவர்களான எஞ்சலோ மெத்தியூஸ், தினேஷ் சந்திமால் உள்ளிட்ட சிரேஷ்ட வீரர்கள் இல்லாமல் இலங்கை அணி பங்களாதேஷ் செல்லவுள்ளது.

இந்த கிரிக்கெட் சுற்றுலாவில் எதிர்வரும் 21 ஆம் திகதி பயிற்சிப் போட்டியில் பங்கேற்கும் இலங்கை அணி, 23 , 25, 28 ஆம் திகதிகளில் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் பங்களாதேஷ் அணியை சந்திக்கவுள்ளது.


இப்போட்டித் தொடருக்காக பயணமாகவுள்ள இலங்கை கிரிக்கெட் குழாத்தினரை நேற்று முன்தினம் உயிரியல் வலயத்துக்குள் (பயோ பபிள்) வைக்கப்பட்டுள்ளனர்.

லக்சான் தனஞ்சய மற்றும் இஷான் ஜயரட்ன [illegible] ருக்கும் கொரோனாத் தொற்று இருப்பதால், இவ்விருவரும் இந்த பயோ பபிள் முறைக்கு உள்வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் குழாம் விபரம்

குசல் ஜனித் பெரேரா (அணித்தலைவர்), குசல் மெண்டிஸ் (உப அணித் தலைவர்), தனுஷ்க குணதிலக்க, பெத்தும் நிஸ்ஸங்க, தனஞ்சய டி சில்வா, நிரோஷன் திக்வெல்ல, தசுன் சானக்க, இசுரு உதான, வனிந்து ஹசரங்க, துஷ்மன்த்த சமீர, அஷேன் பண்டார, ரமேஷ் மெண்டிஸ், லக்சான் சந்தகேன், அக்கில தனஞ்சய, சாமிக்க கருணாரட்ண, அசித்த பெர்னாண்டோ, ஷிரான் பெர் [illegible] (4-6)

## ஐந்து பேர் கொண்ட
# உலகக்கிண்ண ஹொக்கி போட்டியை நடத்துவது குறித்து தீர்மானம்



கடந்த 2019 ஆம் ஆண்டு சர்வதேச ஹொக்கி சம்மேளத்தின் நிறைவேற்று உறுப்பினர்கள் பங்கேற்ற கூட்டத்தில் அணிக்கு ஐந்து பேர் கொண்ட உலகக் கிண்ண ஹொக்கி போட்டி நடத்துவது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் படி அணிக்கு ஐந்து பேர் கொண்ட உலகக் கிண்ண ஹொக்கி போட்டியின் முதலாவது அத்தியாயம் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு உத்தேசித்துள்ளனர்.

இந்தக் கன்னி உலகக் கிண்ணப் போட்டியில் ஆண்கள் பிரிவில் 16 அணிகளும், பெண்கள் பிரிவில் 16 அணிகளும் பங்கேற்கவுள்ளதாக சர்வ தேச ஹொக்கி சம்மேளனம் சட்ட வரைபு ஒன்றை சர் வதேச ஹொக்கி சம்மேளன சட்டத்தில் இணைத்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

வரவேற்பு நாட்டுக்கு மேலதிகமாக அந்தந்த பிராந்திய வலயங்களில் தகுதி பெறும் நாடுகள் இப்போட்டித்தொடரில் பங்கேற்கும் தகுதியைப் பெற்றுக்கொள்ளும்.

5 பேர் கொண்ட ஹொக்கி உலகக் கிண்ணத் தொடரை அறிமுகப்படுத்தி வைப்பதன் ஊடாக சர்வ தேச ரீதியாக ஹொக்கி விளையாட்டை மேலும் முன்னேற்ற முடியும் என்பதுடன்,

மேலும் ஹொக்கி விளையாட்டில் முன்னிலையில் உள்ள அணிகளைத் தவிரவும், வளர்ந்துவரும் அணிகளையும் ஐந்து பேர் கொண்ட உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என் சர்வதேச ஹொக்கி சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் வைரஸ் முற்றாக ஒழியாது

# தடுப்பூசி ஒன்றே சரியான தீர்வு



## கிடைக்கும் போதே பயன்படுத்துங்கள்

(கொழும்பு)

**கொவிட்-19 வைரஸ் உலகில் முழுமையாக அழியும் என உறுதியாகக் கூற முடியாத நிலையேற்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின், ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் ஊடகம் ஒன்றின் நிகழ்வில் கலந்து கொண்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸானது உலகில் என்றென்றும் நிலைத் திருக்க முடியும். எனவே இதற்கு எதிரான ஒரே தீர்வு தடுப்பூசி செலுத்திக்கொள்வதே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எந்த வகையான தடுப்பூசிகள் என்றாலும் அதனை செலுத்திக்கொள்ளும் தேவை ஏற்பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்தின் தடுப்பூசியை செலுத்திக் கொள்ள வேண்டும் என எவரும் காத்திருக்க வேண்டாம்.

தடுப்பூசி கிடைக்கும் வரை காத்திருந்தவரால் சில நேரம் நோயினால் பாதிப்பினை எதிர் நோக்கியிருக்கக்கூடும்.

எனவே தடுப்பூசி கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே அதனை ஏற்றிக் கொள்ள வேண்டும். எதிர்வரும் மாதங்களானது தீர்மானமிக்க ஒரு காலப் பகுதியாகும்.

அத்துடன் வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள உரிய முறையில் தரமான முகக் கவசங்களை அணிய வேண்டும்.

இருவருக்கு இடையில் உரிய சமூக இடைவெளியைப் பேணுதல் அவசியமாகும்.

முடிந்தவரை பொதுவெளியில் இதனைக் கடைப்பிடிக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். அத்தியாவசியத் தேவை கருதி பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களுக்குச் சென்றால் 15 நிமிடங்களில் அங்கிருந்து வெளியேறுவது சிறந்ததாகும்.

நீண்ட நேரம் பொதுமக்கள் இடையே நடமாடும் போதே வைரஸ் தொற்று ஏற்படுகின்றது. அத்துடன் சவர்க்காரம் அல்லது தொற்று நீக்கியை பயன்படுத்தி உரிய முறையில் கைகளைச் சுத்தம் செய்ய வேண்டும்.

அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்ப்பதன் ஊடாகவும் வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின், ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

# 14 நாட்கள் தனிமைப்படுத்தல் போதுமானதல்ல-வைத்திய நிபுணர்

(கொழும்பு)

நாட்டில் பரவிவரும் திரிபடைந்த கொவிட் - 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு 14 நாட்கள் தனிமைப்படுத்தல் போதுமானதல்ல. அதனால் திரிபடைந்த புதிய வைரஸ் பரவிவரும் நாடுகளிலிருந்து வருகை தருபவர்களுக்கான தனிமைப்படுத்தல் காலம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று சுகாதாரக்கொள்கைகள் ஸ்தாபனத்தின் நிறை வேற்றுப்பணிப்பாளர் வைத்திய நிபுணர் ரவி ரன்னன் எலிய வலியுறுத்தியுள்ளார்.

வைத்திய நிபுணர் ரவி ரன்னன்எலிய அவரது டுவிட்டர் பக்கத்தில் மேலும் கூறியிருப்பதாவது,

வெளிநாடுகளிலிருந்து வருகை தருபவர்கள் 14 நாட்கள் கட்டாயத் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். எனினும் இந்த மிகுந்த தாமதத்திற்குப் பின்னரே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானம் முன்னரேயே எடுக்கப்பட்டிருந்தால், நூற்றுக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். எனினும் அத்தகையதொரு தீர்மானத்தை மேற்கொள்ளாமலே இருப்பதையும் விட, தாமதமாகவேனும் மேற்கொள்வது சிறந்ததாகும்.

எனினும் தற்போது நாட்டில் பரவிவரும் திரிபடைந்த வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த 14 நாட்கள் தனிமைப்படுத்தல் போதுமானதல்ல.

அதனால் திரிபடைந்த புதிய வைரஸ் பரவிவரும் நாடுகளிலிருந்து வருகை தருபவர்களுக்கான தனிமைப்படுத்தல் காலம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.(நி-4)


# இந்தியாவில் எட்டு இலங்கையர்கள் கொரோனாவுக்குப் பலி

(கொழும்பு)

இந்தியாவில் தங்கியிருந்த இலங்கையர்களில் எண்மர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

டில்லியில் அறுவரும் ராஜஸ்தானில் இருவரும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவில் தீவிரமாகப் பரவிய கொரோனாக் காலத்தில் அவர்கள் அங்கு தங்கியிருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வடமராட்சியில் குண்டு மீட்பு



(கரணவாய்)

வடமராட்சி புலோலி-பல்லப்பை வீதிக்கு அருகாமையில் இருந்து ஆர்பிஜி குண்டு ஒன்று நேற்று புதன் கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆனைவிழுந்தான் முச்சந்திக்கும் கிராமக் கோட்டு சந்திக்கும் இடைப்பட்ட பல்லப்பை வீதிப் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் வீதிக்கு அருகாமையில் பறிக்கப்பட்ட மண்ணுக்குள் இருந்து குண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனை மீட்பதற்கான நடவடிக்கையினை பருத்தித்துறை பொலிஸார் மேற் கொண்டுள்ளனர்.(5-4-60)

# வயோதிபர்களுக்கே ஆபத்து அதிகம்

## சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

கொவிட் பெருந்தொற்று காரணமாக வயோதிபர்களுக்கே அதிகளவு ஆபத்து காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பேசிய அவர்,

இளையவர்களை விடவும் வயது முதிர்ந்தவர்கள் மரணிப்பதற்கான வாய்ப்பு அதிகம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் கொவிட் காரணமாக இளையோருக்கு ஆபத்து அதிகம் என பேசப்பட்ட போதிலும் உயிரிழப்பு குறித்த புள்ளி விபரத் தகவல்களின் அடிப்படையில் அதிகளவான வயோதிபர்களே உயிரிழந்து வருகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை மக்கள் முழு அளவில் பின்பற்ற வேண்டும் எனவும் வயோதிபர்களைப் பாதுகாக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# மரண வீட்டிற்கு கடும் கட்டுப்பாடு

(கொழும்பு)

உயிரிழந்தவர்களின் உடல்களை வைத்தியசாலையில் இருந்து ஒப்படைக்கப்பட்டு 24 மணித்தியாலத்திற்குள் அடக்கம் செய்யப்பட வேண்டும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் மரண நிகழ்வில் ஒரே தடவையில் ஆகக் கூடியது 15 பேர் மாத்திரமே பங்கு பற்ற முடியும் என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் இன்று வியாழக் கிழமை முற்பகல் 11 மணி முதல் நெடுந்தீவு பிரதேச வைத்திய சாலையில் இடம் பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாமில் நெடுந்தீவுப் பகுதியைச் சேர்ந்த குருதிக் கொடையாள ர்கள் மற்றும் குருதிக் கொடை ஆர்வலர்கள் கொரோனாச் சுகா தார நடை முறைகளைப் பின்ப ற்றிக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

# தடை செய்யப்பட்ட முறையில் தொழில் மேற்கொண்டால் அறிவிக்கவும்

(யாழ்ப்பாணம்)

**கடற்படை மற்றும் கடலோர காவற் படையின் முழுமை யான ஒத்துழைப்புடன் வடக்கு கடல் பிரதேசத்தில் மேற்கொ ள்ளப்பட்டு வருகின்ற தடை செய்யப்பட்ட தொழில் முறை களைப் பூரணமாக கட்டுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது.**

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலை மையில், அமைச்சரின் யாழ். காரியாலயத்தில் நேற்று இடம் பெற்ற கலந் துரையாடலின் போதே மேற்படி தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில், தடை செய்யப்பட்ட தொழில் முறைகள் பயன்படுத்தப்படு வது அவதானிக்கப்படுமா னால், 021 750 8055, 011 309 1815, 026 776 9100 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தகவல் தெரிவிக்குமாறும் கடற் றொழிலாளர்கள் கேட்கப் பட்டுள்ளனர்.

இலங்கையில், தடை செய்யப்பட்ட தொழில் முறை களான குளை போட்டு மீன் பிடித்தல், வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், டயனமைற் பயன்படுத்தல், கரைவலை தொழிலுக்கு உழவு இய ந்திரங்கள் பயன் படுத்தல் மற்றும் அனுமதி பெறாமல் சுருக்கு வலை தொழி லில் ஈடுபடுதல் போன்ற தொழில் செயற்பாடுகளை வட க்கு கடல் பிரதேசத்தில் கட்டுப் படுத்துவதற்கான கடுமை யான நடவடிக்கை களை மேற்கொள் வதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது. (5-4)

# விதிமுறைகளை மீறியதால் வியாபாரம் செய்யத்தடை



(கரணவாய்)

நெல்லியடி பொதுச் சந்தை யில் கொரோனாவைக் கட்டு ப்படுத்தும் நடவடிக்கையில் கர வெட்டி சுகாதார உத்தியோக த்தர்கள்ளள்ளாங்குளம் இராணுவ முகாமை சேர்ந்த இராணுவ த்தினரும் நேற்று ஈடுபட்டனர்.

இதன்போது முகக் கவசம் அணியாமல் வியாபாரம் செய் பவர்களை உடனடியாக அவ் விடத்தில் இருந்து வெளியே ற்றியதுடன் 14 நாட்களுக்கு வியாபாரம் செய்யத் தடையும் விதிக்கப்பட்டது. அத்துடன் ஏனைய இடங்களிலும் சோத னை நடவடிக்கைகள் இடம் பெற்றன. (5-4-60)



சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரிச் சமூகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் யாழ். போதனாவில் நேற்றும், நேற்று முன்தினமும் நடைபெற்றது. (படம்: ரவிசாந்)

# பொதுக்கூட்டத்தை நினைவு கூட்டமாக மாற்ற வேண்டும்- பிரதேசசபை உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

உலகம் முழுவதும் இல ங்கை அரசாங்கம் 2009 ஆம் ஆண்டில் இனப்படு கொலை புரிந்தது என்பதை வெளிப் படையாகக் கூறு வதற்குத் தயங்குகின்ற கால த்தில் தமிழினப் படு கொலையே நடந்தது என் பதைப் பல இடங்களிலும் அங்கீகரித்து வருகிறார்கள் என நல்லூர் பிரதேச சபை யின் உறுப்பினர் கு.மது சுதன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் இடம் பெற்ற சபை அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மே-18 அன்று நல்லூர் பிரதேச சபையின் விசேட கூட்டத் தைக் கூட்டி நினை வஞ்சலியை நிகழ்த்துவ தற்கு நான் பரிந்துரைக்கின் றேன்.

வடமாகாண சபையி லும் இது இனப்படுகொலை என் பதை அங்கீகரித்து ள்ளனர். அதேபோன்று கனடா நாட்டின் ஒரு உள் ளூராட்சி மன்றத்தி லும் இலங்கையில் நடைபெற் றது இனப்படுகொலை தான் என்பதை அங்கீகரித்துள்ள னர்.

எங்கள் உள்ளக்குமுறல் களை வெளிப்படுத்தி அமை தியான முறையில் எங்கள் சபையில் மே-18 நாளை நாங்கள் நினைவுகூர வேண்டும் என்பதை இந்தச் சபையின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

எனவே, மே-18 அன்று எங்கள் இனம் சார்பான கோரிக்கையாக விசேட கூட்டத்தை நினைவு அஞ் சலிக் கூட்டமாக கூட்ட வேண்டும் எனக் கோரி க்கை விடுக்கின்றேன் என் றார்.

இதனைத் தொடர்ந்து நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தெரிவிக்கையில்,

மதுசுதன் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் தீர் மானமொன்றை எடுத்த பின்னர் பதில் வழங்கு கின்றேன் எனத் தெரிவித் தார். (5-4-18)

# நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லை க்குள் அமைந்துள்ள பஸார் 1 பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய் களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ARV) வழங்கப்பட வுள்ளது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சுகாதார வைத்திய அதி காரி அறிவித்துள்ளார்.

அந்த வகையில் எதிர் வரும் 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு முத்தமிழ் வீதி பாலர் பாடசாலை, முற்பகல் 11 மணி க்கு மீனாட்சி அம்மன் கோவி லடி, பிற்பகல் 2.30 மணிக்கு நமசிவாயம் பாடசாலை முன் பாகவும் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு கூழாவடி வைரவர் கோவிலடி, முற்பகல் 11 மணி க்கு சிறாம்பியடி சனசமூக நிலையம், பிற்பகல் 2.30 மணிக்கு பலாலி வீதி 2 ஆம் ஒழுங்கை,19 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.வீதி, முற்பகல் 11 மணிக்கு பெருமாள் கோவிலடி, பி.ப.2.30 மணிக்கு கன்னாதிட்டி காளிகோவிலடி, 20 ஆம் திகதி காலை 9 மணி க்கு சிவன் வடக்கு வீதி பாலர் பாடசாலை, முற்பகல் 11 மணி க்கு கீரிப்பிள்ளையார் கோவி லடி, பிற்பகல் 2.30 மணிக்கு மாவடி வீதி, 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு பிரப்பங் குளம் வீதி, முற்பகல் 11 மணிக்கு பி.ஏ. தம்பிலேன், பிற் பகல் 2.30 மணிக்கு கிளேன் வீதி ஆகிய இடங்களில் வைத்து தடுப்பூசி வழங்கப்படும். (5-4)

# யாழ்.நகரப் பகுதி இராணுவத்தினரால் தொற்று நீக்கம்



(யாழ்ப்பாணம்)

நாடு பூராகவும் கொரோனா தொற்று தீவிர மாக பரவி வரும் நிலையில் யாழ் மாவட்டத்தில் தொற் றுப் பரம்பலை கட்டுப் படுத்தும் முகமாக யாழ். நகரப் பகுதியில் மக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் இடங்களில் கிரு மித் தொற்று நீக்கும் செயற்பாடு நேற்றுக்காலை இராணுவத் தினரால் முன்னெடுக்கப்பட் டது.

யாழ்.மாவட்ட இரா ணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜென ரல் பிரியந்த பெரேராவின் வழிகாட்டுத லின் கீழ் இராணுவத்தின் 51 ஆவது படைப்பிரிவு தள பதியின் நெறிப்படுத்தலில் இராணுவத்தின் 512 ஆவது பிரிகேட் இராணுவ த்தினரால் யாழ்ப்பாண நகரப் பகுதி நீர் ஊற்றி கழுவப்பட்டு கிருமித் தொற்று நீக்கி மருந்து விசி றும் செயற்பாடு முன்னெடு க்கப்பட்டது.

யாழ்.நகரில் பொது மக்கள் அதிகமாக ஒன்று கூடும் யாழ்ப்பாணம் மத் திய பேருந்து நிலையம், கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி, ஆஸ் பத்திரி வீதி ஆகிய வீதிகள் இவ் வாறு தொற்றுநீக்கம் செய்ய ப்பட்டன. (5-18-4-33-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைக்கும்
# வீண் அச்சம் கொள்ள வேண்டாம்

(கொழும்பு)

**மாகாணங்களுக்கு இடையில் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள போதிலும் அத்தியாவசிய சேவைகளை தடையின்றி நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கு அனைத்து தரப்பினரும் தயார் நிலையில் உள்ளனர்.**

அதற்கமைய, நாடு முழுவதும் உள்ள சதொச விற்பனை நிலையங்களுக்கு எவ்வித தடையும் இன்றி அத்தியாவசியப் பொருட்களை கொண்டுசெல்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக சதொச பிரதித் தலைவர் துஷார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடளாவிய விற்பனை நிலையங்களுக்கான எரிவாயு விநியோகம் தடையின்றி மேற்கொள்ளப்படும் என பிரதான எரிவாயு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அவ்வாறே இந்த பயணத் தடைக்கு மத்தியில், நாடளாவிய ரீதியில் வீடுகளுக்கே மருந்துப் பொருட்களை விநியோகிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் மருந்துகளுக்கு எவ்வித பற்றாக்குறையும் இல்லை என்றும், தேவையான மருந்துகள் கையிருப்பில் உள்ளதாகவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

அதேவேளை, பயணத் தடை அமுலாக்கப்பட்டுள்ள காலப்பகுதிகளில் நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகத்தை தங்கு தடையின்றி முன்னெடுக்க முடியும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எனவே, அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவும் என பொதுமக்கள் வீண் அச்சம் கொள்ள வேண்டாம் எனக் கோரப்பட்டுள்ளனர். (நி-4)

## தங்க பிஸ்கட்டுகளுடன் ஒருவர் கைது



(கொழும்பு)

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 18 தங்க பிஸ்கட்டுகளுடன் சந்தேக நபர் ஒருவரை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியக அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் நேற்றுக் காலை 10 மணியளவில் ஓமானர் எயார்வே விமானத்தினூடாக கட்டுநாயக்க, விமான நிலையத்தை வந்தடைந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பறிமுதல் செய்யப்பட்ட தங்க பிஸ்கட்டுகளும், சந்தேக நபரும் மேலதிக விசாரணைகளுக்காக சுங்கப் பிரிவு அதிகாரிகளுடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. (நி-4)

## சீனத் தடுப்பூசி; பக்கவிளைவுகள் இதுவரையில்லை

(கொழும்பு)

சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோபார்ம் கொவிட் தடுப்பூசி போடப்பட்ட எவரிடமிருந்தும் இதுவரை எந்தவொரு பக்க விளைவுகளும் பதிவாகவில்லை என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்துள்ளார். (நி-4)

## இரண்டு வாரங்களில் 6 லட்சம் தடுப்பூசிகள்

(கொழும்பு)

எதிர்வரும் 2 வாரங்களில் ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளதென சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, 6 இலட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெறவுள்ளதென தெரிவித்த அவர், குறித்த தடுப்பூசிகள் **20°C** இற்கு குறைந்தளவு வெப்ப நிலையில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (நி-4)

## பிலியந்தலைக்கு செல்லத் தடை

(கொழும்பு)

பிலியந்தலை நகருக்குள் பிரவேசித்தல் மற்றும் நகரின் ஊடாக பயணிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார். (நி-4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: **36 ¾** செவ் 6 சூரி2 இல் உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: **A/L.** கடை லண்டன் **PR** உண்டு<br>எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு (லண்டன் மட்டும்)<br>தொ.இ: **B/11900** | பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்:கேட்டை<br>கி.பா: 45 செவ் 1 சூரி 12 இல் உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: **MB,CLB,CCFT, Work-MBBS Doctor (Canada)**<br>எதிர்பார்ப்பு: கனடா,அமெரிக்கா மட்டும்<br>தொ.இ: **B/4857** |
| பிறப்பு:1980 இந்து நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: **17 ½**செவ் 12 சூரி9 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்**A/L, Fever Surveillance Assistant**<br>எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண், வெளிநாடும் பார்க்கலாம் (கனடா,**UK**)<br>தொ.இ: **B/597** | பிறப்பு:1983 இந்து நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா: 8செவ், சூரி9 இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:**B.Sc,Project Administrator**<br>எதிர்பார்ப்பு:அரச,தனியார் உத்தியோகம், சைவ போசனம் முக்கியம்,வெளிநாடும் பார்க்கலாம்<br>தொ.இ:**G/4866** |
| பிறப்பு:1978 இந்து நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: **74 ¼**செவ் 7சூரி5 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:**A/L**,மலேசியா சுப்பர் மார்க்கெட்<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: **B/607** | பிறப்பு:1987இந்து நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா:41செவ்,சூரி7 இல் உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:**MRA London,Work-Resuarcher**<br>எதிர்பார்ப்பு:உள்நாடு, வெளிநாடு, சைவ போசனம் பட்டதாரி<br>தொ.இ:**G/4881** |
| பிறப்பு:1974 இந்து நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: செவ் 11சூரி 8இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்:அரசஉத்தியோகம்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்,தொழில் புரிபவராக இருத்தல் நன்று, உள்நாடு<br>தொ.இ: **B/676** | பிறப்பு: 1971 இந்து நட்சத்திரம்:மகம்<br>கி.பா:56 செவ் 10 சூரி12 இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: **A/L**, நிதிமுகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம் எதிர்பார்க்கப்படும்<br>தொ.இ:G/4890 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## கிழக்கு மாகாண ஆளுநருக்கு கொவிட் தொற்று உறுதி



(மூதூர்)

தமக்கு கொவிட் - 19 தொற்றுறுதியானதாக கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மூதூர் பகுதியில் அநுராதா யஹம்பத் கலந்து கொண்டிருந்த நிகழ்வொன்றில் பங்கேற்றிருந்த ஒருவருக்கு, கொவிட்-19 தொற்றுறுதியானது.

இதனையடுத்து அநுராதா யஹம்பத் சுயதனிமைப்படுத்திக்கொண்டிருந்த நிலையில், இவ்வாறு தொற்றுறுதியாகியுள்ளது. (நி-4)

## அறுவைச்சிகிச்சைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு தேசிய மருத்துவமனையில் மேற்கொள்ளப்படவிருந்த அனைத்து அறுவைச் சிகிச்சைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று அதிகரிப்பின் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனையின் பணிப்பாளர் குமார விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எனினும், அவசர அறுவைச்சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார். (நி-4)

## அமெரிக்காவுக்கு பறந்த பசில்

(கொழும்பு)

பொருளாதார புத்துயிர் மற்றும் வறுமையொழிப்பு பற்றிய ஜனாதிபதி செயலணியின் தலைவரான முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ நேற்று புதன்கிழமை அதிகாலை அவசரமாக அமெரிக்கா சென்றார்.

அவசரமாக பெற்றுக்கொள்ள வேண்டிய மருத்துவத் தேவைக்காகவே அவர் அமெரிக்கா பயணமானதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா கட்டுப்பாடு பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றி அமையாது

## மன்னார் அரச அதிபர்

(மன்னார்)

**இந்தியாவில் இடம்பெற்று வருகின்ற அபாயகர மான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு எமது மாவ ட்டத்தில் இவ்வாறான சம்பவம் ஏற்படாத விதத்தில் அனைவரும் இணைந்து சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்றி மக்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் கொரோனா தொடர்பாக மாவட்ட செயலகத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் நாட்களில் மாவட்ட ரீதியாக எவ்வாறான நடைமுறைகளைக் கையாள வேண்டும் என்பது தொடர்பாகவும் குறிப்பாக தற்போது மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளமையினால் அத்தியாவசிய தேவைகள் அடையாளம் கண்டு அவர்கள் வெளி மாகாணங்களுக்குச் சென்று பொருட்களை கொள்வனவு செய்வதற்கான "பாஸ்" நடைமுறைகள் தொடர்பாகவும் நாங்கள் கலந்துரையாடி உண்மையில் அத்தியாவசிய சேவைகளை வழங்குபவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு மாத்திரமே பாஸ் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்தோடு மீனவர்கள் கட்டாயம் பாஸ் வைத்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்



கப்பட்டுள்ளது. மேலும் மன்னார் மாவட்டத்தில் பொலிஸாரின் விசேட நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும்.

எவ்வாறான நடவடிக்கைகளையும் மேற்கொண்டாலும் மக்களுடைய முழுமையான ஒத்துழைப்பு இல்லை என்றால் இந்த அபாயத்தில் இருந்து எங்களைப் பாதுகாத்துக் கொள்வது பாரிய சவாலாக இருக்கும் என மேலும் தெரிவித்தார். (5-4-285)



வவுனியாவில் இரு இளைஞர்கள் வீதியோரங்களில் மரங்களை நாட்டும் நற்காரியமொன்றினை மேற்கொண்டு வருகின்றனர். (படம்:-சதீஸ்)

# தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு முகக்கவசங்கள், தொற்று நீக்கிகள்

(அக்கராயன்)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி எல்லைக்குள் தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களிற்கு ஒரு மாத காலப்பகுதிக்கு தேவையான முகக் கவசங்களையும் மற்றும் தொற்று நீக்கிகளையும் வழங்க பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார். சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பச்சிலைப் பள்ளி பிரதேசத்தின் சோரன் பற்று கிராம உத்தியோகத்தர் பிரிவில் 12 தொற்றாளர் இனம் காணப்பட்ட நிலையில் சபையினால் தொற்று பரவாமல் கட்டுப்படுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப் பட்டது.

இந்த நிலையிலேயே தனிமைப்படுத்தப்பட்டு குறித்த காலம் நிறைவடைந்ததும் வெளியில் உலாவும் நபர்கள் முகக் கவசம் அணியாத நிலைமை உள்ளதை சுட்டிகாட்டி குறித்த முடிவு எடுக்கப்பட்டது. (5-4-350)

# அடிப்படை வசதிகளற்று காணப்படும் அம்பலப்பெருமாள்குள கிராமம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெருமாள்குளம்அடிப்படை வசதிகளற்ற கிராமமாகக் காணப்படுகின்றது. 1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்குடியேற்றத் திட்டத்தில் தற்போது 110 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன.

இக்கிராமத்திற்கான பேருந்து சேவைகள் இடம்பெறுவதில்லை. இக்கிராம மக்கள் அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்கும் மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கும் செல்வதற்கு பதினைந்து கிலோ மீற்றருக்கு அதிகமான தூரம் பயணிக்க வேண்டி உள்ளது.

இக்கிராமத்தின் மாணவர்கள் அக்கராயன் மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி செல்வதற்கு போக்குவரத்து பெரும் தடையாக உள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து இக்கிராமத்திற்கு சேவையில் ஈடுபடுமானால் பெருமளவு மாணவர்கள் கல்வியில் முன்னேறுவார்கள்.

விவசாயமும் கால்நடை வளர்ப்பும் இக்கிராமத்தில் முக்கியமான வாழ்வாதாரமாகக் காணப்படுகின்ற போதிலும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இல்லை. மேலும் இக்கிராமத்தில் அம்பலவன் சின்னக்கட்டுக் குளத்தின் கீழ் பெருமளவு நிலம் உவர் நிலங்களாக மாறி வரும் நிலையில் குறித்த உவர் நிலங்களை நன் நிலங்களாக மாற்றுவதற்கு உவர்த் தடுப்பணைகள் அமைக்கப்பட வேண்டும் என்பது இம் மக்களின் முக்கிய கோரிக்கையாகும். (5-4-350)



மன்னார் றோட்டறிக் கழகம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று மன்னார் தனியார் விடுதியில் நடைபெற்றது. இவ் இரத்ததான முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (படம்:-ஜோசேப்நயன்)

## 7 பேருக்குக் கொரோனாத் தொற்று

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 7 பேருக்குக் கொரோனாத் தொற்று நேற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இயங்கிவருகின்ற ஆடைத் தொழிற்சாலையில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 30 அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர்.

இவர்கள் தற்போது நாட்டிலுள்ள நடைமுறைகளுக்கு அமைய வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்தாலும் தனிமைப்படுத்தல் செயற்பாடின்றி நேரடியாக கடமையாற்றிவரும் நிலையில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரத் துறையினர் இவர்களில் 10 பேருக்கு எழுமாறாக பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

அவர்களிடமிருந்து 6 பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையிலே குறித்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிவரும் சாதாரண பணியாற்றிய ஒருவர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (5-4-28)

## வைத்தியர், தாதியர்களுக்குத் தொற்று

(நெளுக்குளம்)

வவுனியா வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் நால்வருக்குக் கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது:

வவுனியா வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் கடமை புரியும் வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களிடம் பி.சி.ஆர்.பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

நேற்று வெளியான பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் அவர்களிற்குத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அவர்களுடன் தொடர்புகளை பேணியவர்கள் தனிமைப்படுத்தப்படவுள்ளதுடன், தொற்றுறுதியானவர்களை கொரோனா வைத்தியசாலைக்கு மாற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (5-4-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

13.05.2021
சித்திரை 30, வியாழக்கிழமை
துதியை பின்னிரவு 4.50 மணிவரை
ரோகினி பின்னிரவு 5.04 மணிவரை
சுபநேரம் 7.24 - 8.54 மணிவரை
இராகுகாலம் 1.24 - 2.54 மணிவரை
சந்திராஷ்டமம்:- விசாகம் வளவன்


மேஷம்
குடும்பத்தினர் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.


ரிஷபம்
பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.


மிதுனம்
குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, புதிய நட்பால் பொருள் விரயம் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கடகம்
பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிர்ஷ்டகரமான நாள், காரியங்கள் எளிதில் கைகூடும்.


சிம்மம்
செய் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


கன்னி
தொழிலில் இருந்த எதிர்ப்புகள் குறையும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்ப்புகள் கைகூடும் வாய்ப்புண்டு.


துலாம்
சேமிப்புகள் கரையும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.


விருச்சிகம்
இரவு-பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு
இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, உடல் நலன் சீராகும்.


மகரம்
மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.


கும்பம்
பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.


மீனம்
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்கள் உறுதுணையாக இருப்பர், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும்.

பொறாமைக்காரன் நண்பனை இழப்பான். கோபக்காரன் தன்னையே இழப்பான்.

# வோஷிங்டன் பல்கலை.அறிக்கையை சாதாரணமாக கருதிவிட வேண்டாம்

## எச்சரிக்கிறார் வைத்திய நிபுணர் சஞ்சய

(கொழும்பு)

**"நாட்டின் உண்மை நிலையை மறைப்பதால் செப்டெம்பர் மாதத்தில் ஐந்து இலட்சம் தொற்றாளர் இலங்கையில் அடையாளம் காணப்படலாம் எனவும் மரணங்கள் அதிகரிக்கலாம் எனவும் வோஷிங்டன் பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கையில் உண்மைத்தன்மை அடங்கியுள்ளது. அந்த அறிக்கையை சாதாரணமாகக் கருதிவிட வேண்டாம்"**

இவ்வாறு மருந்துகள் மற்றும் சுகாதார நிர்வாகம் தொடர்பான வைத்திய நிபுணர் பேராசிரியர் சஞ்சய பெரேரா தெரிவித்தார்.

வோஷிங்டன் பல்கலைக் கழக கொரோனா உள்ளிட்ட தொற்றுநோய் ஆய்வுகள் குறித்த குழுவினர் உலகத்தில் கொரோனா வைரஸ் முதலாம் அலை உருவாகிய காலத்தில் இருந்தே கணிப்புகளை முன்வைத்து வருகின்றனர். அமெரிக்கா பாரிய அளவில் பாதிக்கப்படப்போவதாகவும் இந்தப் பல்கலைக்கழகமே முதலில் அறிவித்தது.

அவர்களின் கணிப்புகள் தவறானதாக எங்கேயும் குறிப்பிடப்பட்டு செய்திகள் வெளியிடப்பட்டதை நாம் அவதானிக்கவில்லை. அதேபோல் இலங்கை குறித்து தெரிவித்துள்ள காரணிகளையும் அந்த அறிக்கையையும் நான் முழுமையாக ஆராய்ந்தேன். இந்த அறிக்கையில் உண்மையானதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான காரணிகள் உள்ளன.

எனவே, இந்த ஆய்வு அறிக்கையை நிராகரிக்க வேண்டாமென அரசை வலியுறுத்துகின்றேன்.

இந்தியாவில் தற்போது பரவும் வைரஸான பி.1.617 என்ற வைரஸ்க்கு மாறாக பி.1.618 என்ற புதிய வகையான வைரஸ்ம் பரவிக்கொண்டுள்ளது.

எனவே வைரஸ் தனது தன்மைகளை மாற்றிக்கொண்டுள்ளதைத் தெளிவாக அடையாளம் காண முடிகின்றது.

இவ்வாறான நிலையில் இலங்கைக்கென்ற புதிய வைரஸ் ஒன்று உருவாக அதிக வாய்ப்புகள் உள்ளது என அவர் தெரிவித்தார். (நி-4)

# வீதிகளில் இறக்கும் நிலையை உருவாக்க வேண்டாம்

## நாட்டை முடக்குங்கள்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் நிலைமைகளைக் கையாள்வதில் ராஜபக்ஷ அரசு படுதோல்வியடைந்துள்ளதாக அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது பேசிய அவர்,

கொரோனா விடயத்தில் அரசு இப்போதும் பொய்யான தரவுகளையே கூறுகின்றது. ஆனால், அமெரிக்காவின் வோஷிங்டன் பல்கலைக்கழக அறிக்கையில் இலங்கையில் செப்டெம்பர் மாதமளவில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான கொரோனா மரணங்கள் ஏற்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தரவுகள் அரசிடம் இருந்தாலும் அவர்கள் அதனை வெளிப்படுத்த மறுக்கின்றனர்.

இப்போதுள்ள நிலைமையில் நாட்டை குறைந்தது இரண்டு வாரங்களேனும் நாட்டை முடக்காது விட்டால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர் போன்றவர்கள் தூரநோக்குடன் இது குறித்து சிந்திக்காது போனால் இந்த நாடும் இந்தியாவைப் போன்றதொரு நிலைமையை அடையும். அவ்வாறான நிலையொன்றை உருவாக்க எம்மால் இடமளிக்க முடியாது.

தகுதியான சுகாதார அதிகாரிகளை ஓரங்கட்டிவிட்டு இராணுவமும் தகுதி இல்லாத அதிகாரிகளும் அமைச்சர்களும் அரச நிர்வாகத்தைக் கையில் எடுத்துள்ள காரணத்தால் இந்தியாவின் நிலையொன்று இலங்கைக்கும் ஏற்படும் அச்சம் உள்ளது.

இந்த நிலையில் ஆட்சியாளர்களை நம்பிய பொதுமக்கள் இறுதியாக வீதிகளில் இறந்து கிடக்கும் நிலையை உருவாக்கிவிட வேண்டாம் என அவர் தெரிவித்தார். (நி-4)

## அரசின் தன்னிச்சையான செயற்பாடே வைரஸ் பரவக் காரணம் - மத்தும

(கொழும்பு)

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு வைத்திய நிபுணர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனைய துறையினரால் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட் தொற்று தீவிரமடைந்து தொற்றாளர்கள் பெருமளவானோர் உயிரிழப்பதற்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும். வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கு பல செயலணிகள் உருவாக்கப்பட்டுள்ள போதிலும் நிலைமை இன்னும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை. தடுப்பூசிகளைத் துரிதமாகக் கொள்வனவு செய்து நாட்டு மக்களைப் பாதுகாக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். தன்னிச்சையாக செயற்பட்டதன் காரணமாகவே இந்த நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது என மத்தும தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணி
# செல்வி.ஜெயா தம்பையா அவர்களின் மணிவிழா சிற

## நல்லை ஆதீன குருவின் ஆசியுரை

அன்புள்ள செல்வி.ஜெயா தம்பையா பணிப்பாளராக கடமையாற்றி இன்று ஓய்வு நிலையை அடைவதையிட்டு மலர் வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். யாழ்ப்பாணப் பாரம்பரியக் கல்வி வளர்ச்சிக்காக. கல்விக்காக முப்பது ஆண்டுகள் பணியாற்றி எல்லோரையும் கல்வியாளர்களாக சிறப்பித்தமை அனைவரையும் மகிழ்வடைய வைக்கின்றது.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பதனை முன்பள்ளிக்கல்வி ஆர்வம் கொண்டு பல மாணவர்களுடைய நன்மைக்கு அவர்களின் கல்வியையும் ஊக்குவித்த பெருமையும் பல பாடசாலைகளில் பணியாற்றி உதவிப்பணியாளராகவும் ஆசிரியராகவும் வடமாகாண முன்பள்ளி அபிவிருத்தி பணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு நிலை அடைவது சிறப்பாகும். இப்பணியைப் பாராட்டி மணிவிழா நாயகியை வாழ்த்தி மலர்க்குழு மலர் வெளியிடுவது வருகின்ற சமுதாயத்திற்கு முன்மொழிவதாகும். செல்வி அவர்கள் மகிழ்ச்சியாக வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.**

## யாழ்.மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி

வடக்கு. கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தியின் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும். தொடர்ந்து வடமாகாண முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தியின் பணிப்பாளராகவும் இருபத்து மூன்று வருட கால சேவை செய்து ஓய்வு பெறும் செல்வி.ஜெயா தம்பையா அவர்கள் மணிவிழா காணுவதையிட்டு என் வாழ்த்துக்களையும். பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மனித வாழ்வின் ஆரம்பப் பிள்ளைப் பருவம் என்பது முக்கியமானதாக இருக்கின்றது. அந்த முக்கியமான முன்பள்ளி கல்வியை பிள்ளைகளுக்கு நல்ல முறையிலும். நேர்த்தியாகவும் கொடுத்து எதிர்கால சந்ததியை வளர்த்து. உருவாக்கிய பணிகளுக்கு எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவருடைய அறிவும் அனுபவமும். ஆளுமையும் தொடர்ந்தும் எம் பிள்ளைகளுக்கும். சமுதாயத்திற்கு கிடைக்கவும். இவர் என்றும் மகிழ்வாகவும் வளமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ ஆசித்து இறையாசிகளை வழங்கி வாழ்த்துகின்றேன்.

**கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள**
**பேரருட் திரு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் யாழ்.ஆயர்**

## சிறுவர் வாழ்வை சிறக்க வைத்தவர்

"கற்போருக்கும். கற்பிப்போருக்கும் அகிலத்தில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் பிரார்த்தனை செய்கின்றன" என்ற அன்னல் நபி முஹம்மது (ஸல்) அவர்களின் அமுதவாக்கிற்கேற்ப செல்வி.ஜெயா தம்பையா அனைத்து உயிரினங்களினதும் ஆசிபெற்ற வீரப்பெண்ணாக இன்று வாழ்த்தப்படுகிறார்.

கல்வி என்பது இறைவனால் வழங்கப்பட்ட அருட்கொடையாகும். குறிப்பாக முன்பள்ளிப் பருவ பிள்ளைச் செல்வங்களுக்கு கல்வி வழங்கும் செயற்பாட்டை பொறுப்பேற்று நடத்துவது என்பது போற்றக்கூடிய உன்னதமான பணியாகும்.

இத்தகைய உயரிய சேவையை மேற்கொண்டு இளம் சிறார்களின் வாழ்வை சிறப்பாகச் செப்பனிட்டு எதிர்காலத்தில் பல்வகை ஆளுமைகளும் கொண்ட தலைவர்களை உருவாக்குவதில் செல்வி.ஜெயா தம்பையா மேற்கொண்ட அறப்பணிகள் காலத்தால் அழியாதவை. இவரது அழியாத அறப்பணிக்கு எனது மனமார்ந்த நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**Dr.AL-Hafil, AL-Maulavi. M.I.M.Siddeek. (AL-Azhari)**
**B.A in AL - Azhar University - Cairo, Egypt.**
**M.A & ph.D in International Islamic University, Malaysia.**
**Principal, sUmmu Dhartha Ladies Arabic College.**

## ஆளுமைக்கோர் எடுத்துக்காட்டு

தனது 60 ஆவது அகவையை பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் செல்வி.ஜெயா தம்பையா அவர்களின் கல்விச் சேவையை பாராட்டுவதுடன் சேவை நயப்பு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆரம்ப பிள்ளைப் பருவ கல்வி என்பது அனைவரது வாழ்விலும் ஏற்படுத்தப்படும் ஒரு அத்திபாரமாகும். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பர். சிறுவயதில் கொடுக்கப்படும் புறச் சூழலானது பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. பெற்றோர். குடும்ப உறவுகளின் அகச் சூழலில் இருந்து முதன் முதல் முன்பள்ளிச் சூழலை ஒரு குழந்தை அடைகின்றபோது அவர்களின் புறச்சூழல் முற்றிலும் வித்தியாசமானவை. அத்தகைய சூழல் சிறப்பாக அமைய வேண்டியது மிகவும் முக்கியமானவை. அந்தச்சூழல் எவ்வாறு அமைய வேண்டும் எனவும் எவ்வாறு பேணுவது என்பதும் அதனை எவ்வாறு தொடர்ச்சியாக கண்காணிப்பது என்பது தொடர்பிலும் கொள்கைகள் வகுத்து அவற்றை நிறைவேற்றல் என்பதும் மிக முக்கிய பணியாகும். அவற்றை முறையாக செயற்படுத்தி அவற்றின் கண்காணிப்பையும் செயற்பாட்டையும் செல்வி.ஜெயா தம்பையா அவர்கள் சிறப்பாக செவ்வனே ஆற்றியுள்ளமை பாராட்டத்தக்கது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையாக திருகோணமலையில் வடமாகாண அலுவலகங்கள் இயங்கியபோது பகல் நேரப் பராமரிப்பு நிலையத்தை இப்பிரிவின் கீழ் ஆக்கபூர்வமாக செயற்படுத்தியமை மிகவும் பாராட்டத்தக்கது. முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களை ஒன்றிணைத்து அவர்களின் கற்றல். கற்பித்தல் செயற்பாடுகளை வளப்படுத்தியும் கண்காணித்தும் செயற்படுத்தியமை சிறப்பான அம்சமாகும். அவரின் இயல்பான குணத்தினால் மிகவும் பண்பாகவும் மேன்மையுடனும் பணியாற்றும் சிறப்பு பெருந்தன்மைக்குரியதாகும்.

இவர் தனது பதவிக்காலத்தில் மேற்கொண்ட சேவையினை பாராட்டுவதுடன் தனது ஓய்வுக் காலத்தில் பல சமூக. சமய பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**இ.இளங்கோவன். செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**

## சிறந்த சேவையாளர்

1985 ஆம் ஆண்டில் ஆசிரியராகச் சேவையை ஆரம்பித்து வடக்கு-கிழக்கு மாகாணத்தினது முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் தொடர்ந்து பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். முன்பள்ளிகள் தனிநபர்களாலும் சமூக அமைப்புகளாலும் சில பிரதேச சபைகளினாலும் நடத்தப்படுகின்றன. இவை தொடர்பாக முறையான ஒழுங்குபடுத்தல்கள். கண்காணிப்புக்கள் குறைவாகவே காணப்பட்டன. இந்நிலையில் முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தி பிரிவானது முன்பள்ளிக் கல்வியினை ஒழுங்கமைப்பதில் தனது பணியினை சிறப்பாக ஆற்றியுள்ளது. அந்த வகையில் பொதுவான கலைத்திட்டம் மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் என்பன வரையறுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது. முன்பள்ளி தொடர்பான நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. முன்பள்ளிகளை பதிவு செய்வதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்பள்ளிக் கல்வி அபிவிருத்திப் பிரிவினது பணிப்பாளராக மேற்கூறிய விடயங்களையெல்லாம் நிறைவேற்றுவதில் செல்வி .ஜெயா தம்பையா அவர்களது பணி அளப்பரியதாகும். இவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துவதோடு தொடர்ந்தும் வடக்கில் வாழும் சிறார்களின் சிறப்பான எதிர்காலத்திற்காக பங்களிப்பினை வழங்க வேண்டுகின்றேன்.

**செ.உதயகுமார்**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**வடக்கு மாகாணம்.**

## மாகாண முன்பள்ளிகள் அபிவிருத்திக்கு அர்ப்பணிப்பான சேவைகள்

முன்பிள்ளைப்பருவக் கல்வியானது ஒவ்வொரு பிள்ளையின் வாழ்க்கைப் பருவத்தில் மிக முக்கியமானதொரு பருவமாகும். நல்லாரோக்கியம், சூழலுக்காக தூண்டல், அழுத்தங்களற்ற அமைதியான கல்விச் செயற்பாடு மற்றும் உடல், உள பாதுகாப்பு போன்றவை பிள்ளையை புத்திசாதுரியமான கற்றலுக்கான ஆற்றல் மிகுந்த ஒரு மாணவனாக உருவாக்குவதை உறுதி செய்வதுடன், எதிர்காலத்தில் நற்குணங்கள் நிறைந்த ஆரோக்கியமான செயற்பாட்டுத்திறனோடு கூடிய அறிவுத்திறன்மிக்க வாழ்க்கைக்கு வித்திடுவதனையும் உறுதி செய்கின்ற கல்விச் சேவையாக இம் முன்பள்ளிப்பிராயக் கல்வி அமைகின்றது.

1998 ஆம் ஆண்டில் 50 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கேதுவாகவும் முன்பள்ளிச் செயற்பாடுகளை வலுவூட்டும் பொருட்டும், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ், மாகாண முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவு உருவாக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் ஆசிரிய சேவையில் இணைந்து பல்வேறு மாகாணங்களில் பாடசாலைகளில் ஆசிரியையாக கடமையாற்றிக் கொண்டிருந்த செல்வி.ஜெயா தம்பையா அவர்கள் 1998 ஆம் ஆண்டில் முன்பள்ளிக்கல்வி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டார். முன்பள்ளி மற்றும் சிறுவர் நேயக்கல்வி 'தொடர்பான வேலைத்திட்டங்கள், கொள்கைகள் மற்றும் விரிவாக்கல் திட்டங்களிற்கு அமைய வினைத்திறனுடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றி. இப்பிரிவில் தொடர்ச்சியாக இருப்பத்து மூன்று வருடங்களாக சேவையாற்றி வந்துள்ளமை மிகவும் பாராட்டப்பட வேண்டியதொரு விடயமாகும்.

முன்பள்ளிக் கல்வியின் எண்ணக்கருச்சட்டகத்தின் கீழான செயற்றிட்டங்களை முன் ஆரம்பப் பாடசாலைகளுக்கும். ஆரம்பப் பாடசாலைக்கும் ஏற்றவாறு ஒழுங்கமைத்து. சிறுவர் கல்விச் சேவையில் செயலாற்றும் அபிவிருத்தி முகவர்கள் (UNICEF/UNHCR) மற்றும் தொண்டு நிறுவனங்களின் (ஆறுதல்) அனுசரணையுடன். முன்பள்ளிக்கல்வி கற்பித்தலுக்குத் தேவையான செயலமர்வுகள். கலந்துரையாடல்கள் மற்றும் உள்ளகப் பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு ஒழுங்கமைத்து முன்பள்ளிக்கல்வித் தேவையின் முக்கியத்துவத்தினை பெற்றோர் மத்தியிலும் சமூகத்தினர் மத்தியிலும் வெளிக்கொணர்ந்து சிறந்த பெறுபேற்றினையும் சிறார் அடைவு மட்டத்தினையும் கிராம மற்றும் பிரதேச வாரியாக செயலுருப்படுத்தியுள்ளார்.

பிள்ளைகளின் செயல் வளர்ச்சியில் பெற்றோரின் பங்காற்றல். முன்பள்ளிகளிற்கு பொருத்தமான ஏனைய துறைகளினதும் வகிபங்கினையும். பொறுப்புக்களையும் தெளிவாக வரையறை செய்து முன்பள்ளி மற்றும் பிள்ளை பராமரிப்பு நிலையம் தொடர்பிலான ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களிற்கு வேண்டிய பௌதீக வளங்கள் மற்றும் ஆசிரிய சேவை வழங்கலுக்கான செயற்றிட்டங்களை முறைப்படி தயாரித்து உரிய நேரத்தில் சமர்ப்பித்து வகிக்கப்பட்ட சேவையினை வளப்படுத்துவதிலும் வலுப்படுத்துவதிலும் ஆர்வமும் ஊக்கமும் நிறைந்த ஒரு நிறைவான சேவையாளராக கடமையாற்றி வந்துள்ளார்.

சிறார் கல்வியின் மேம்படுத்தலில் ஓர் நிலையான வளர்ச்சிப் படிமுறையை உட்புகுத்தி. தரமிக்க நிர்வாக கட்டமைப்பினையும் செயலாற்றுகையையும் வடக்கு மாகாண முன்பள்ளிக் கல்விச் சேவையில் உருவாக்கிய செல்வி.ஜெயா தம்பையா அவர்களின் சேவையை மனதாரப் பாராட்டுவதுடன் அவரின் சேவை ஓய்வுக் காலமானது இன்னும் பல் பரிணாம சமூக சேவைகளுடனும் உடல். உள ஆரோக்கியத்துடனும் விளங்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அ.பத்திநாதன்**
**பிரதம செயலாளர் -வடமாகாணம்.**

## வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

என்னுள் ஊற்றெடுத்த வடக்கு-கிழக்கு முன்பள்ளிக்கல்வியின் வளர்ச்சிக்கு அவசியமான "வடலிகள் வானுயரும்" என்ற தூரநோக்குக் கொண்ட சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்த செல்வி.ஜெயா தம்பையா அவர்கள் அரச சேவையிலிருந்து இன்றுடன் ஓய்வு பெறவுள்ளார்.

செல்வி.ஜெயா தம்பையா அவர்களை கடந்த 35 வருடங்களிற்கு மேலாக நான் அறிவேன்.

அவர் தனது பல்கலைக்கழகத்தில் ஏற்றுக்கொண்ட சமூக மாற்றத்திற்கான சிந்தனைகளை இதயத்துடிப்போடு இன்றுவரை ஏற்று செயற்பட்டு வருகின்றார்.

அவர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் மக்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற மாட்டார் என்பதை நான் நன்கு அறிவேன். அவருக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

**சுந்தரம் டிவகலாலா**
**பிரதம [illegible] பணிப்பாளர், ஆறுதல்**
**[illegible], வடக்குக் கிழக்கு மாகாணம்.**

## மேனாள் துணைவேந்த

மணிவிழாக்காணும் முன் பிள்ளைப்பருவ மேம்பா
ஜெயா தம்பையாவை வாழ்த்தும் இவ்வேளை பெறு
உணர் திறன்மிக்க ஆதார பருவமாக முன் பிள்ளைப்ப
கல்வி மேம்பாட்டுக்கென மாகாண கல்வியமைச்சி
பெற்றமை எங்கள் கல்வி வரலாற்றில் மைல்கல் என
பாளராகி மேலான தன் பணிகளால் பெருமை சேர்த்த

எங்கள் பல்கலைக்கழகத்தின் புவியியல் சிறப்பு
பாடசாலை ஆசிரியப்பணி, உயர் கல்வியியல் பயி
நிர்வாகப்பணியில் இணைந்து கொண்டவர் ஜெயா.

இலங்கை கல்விக்கட்டமைப்பில் உள்ளும் புற
முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டினை நிர்வகிப்பதில் சந்தி
கையாண்டதிலிருந்து அண்மையில் மாகாண முன்
செயற்பாடுவரை அண்மையிலும் சேய்மையிலும் அவர் அ
படக் கண்டோம். இன்று மணிவிழாக்காணும் ஜெயா த
அர்த்தமுள்ள சமூக வாழ்வில் நிறைந்திட எல்லையில

**பேராசிரியர், கலாநிதி என் .ச**
**மேனாள் துணைவே**
**யாழ்ப்பாணப் பல்கலைக்**

## முன்பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கு அயரா

செல்வி.ஜெயா தம்பையா அவர்களின்
விழாவையிட்டு வாழ்த்துச் செய்தி எழுதுவ
கின்றேன். நான் செல்வி.ஜெயா தம்பையாவுட
தொடர்பு கொண்டவனாக உள்ளேன். முதலி
கழகத்தில் இவர் எனது மாணவியாக விளங்கி
காலத்திற்குக் காலம் நடக்கும் கருத்தரங்குகளிலு
இவரைச் சந்திக்கும் வாய்ப்புகளும் கிடைத்தன.

கல்விப் பணியின் ஆரம்ப காலத்தில் முன்
இவருக்கு ஏற்பட்ட ஈடுபாடு காரணமாக இத்துறை
மேம்படுத்தினார்.

இலங்கையில் குறிப்பாக வடக்கு-கிழக்கு ம
கல்வி சார்ந்த பாடவிதானம் ஆசிரிய வாண்
ஆசிரிய கொடுப்பனவுகள் போன்றவற்றில்
நோக்கப்பட்டன. மேலும் முன்பள்ளித்துறை
ஆரம்பக் கல்விச் செயற்பாட்டை முன்னெடுப்
முன்பள்ளித் துறையின் விருத்தி பொதுவான
மேம்பாட்டிற்கும் பெரிதும் கைகொடுக்கும் என்ற
இவர் தன் பணியைச் சிறப்பாகச் செய்தார். வட
இன்றைய முன்பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கு
செல்வி.ஜெயா தம்பையா ஆவார்.

கல்விப் பணிக்கு அப்பால் சமூகப் பணிகளி
செயற்பட்டார். செல்வி.தம்பையா அரச சேவையி
சமூக சேவையில் தொடர்ந்தும் ஈடுபட வேண்டும்

இவர் சீர் சிறப்பாக நல்ல உடல் நலத்துடன் வா
அருள் கிட்டுமாக.

**சிரேஷ்ட பேராசிரியர் பொ.பாலசுந்தரம்**
**வாழ்நாள் பேராசிரியர்/முன்னாள்**
**யாழ்ப்பாணப் பல்கலை**

## முன்பள்ளிக்கல்வியை மு
## முன்னகர்த்திய அம்மணிக்கு

வடகிழக்கு மாகாணம் இணைந்திருந்தபோது மு
பாளராகச் செயற்பட்டு வடக்கு மாகாணம் தனித்துவமாக இ
பள்ளிகளின் பணிப்பாளராகச் செயற்பட்டுள்ளார். மு
தினையும் ஆசிரியர் கற்பித்தல் வழிகாட்டியினையு
துவதில் முக்கிய பங்கு வகித்தவர். ஆசிரியர்களுக்கா
சிறந்த முறையில் திட்டமிட்டு அவர்களின் வாண்மை வி

முன்பள்ளிகளை கல்வி அமைச்சில் ஒருங்கி
சபையினூடாக மாதாந்த ஊக்குவிப்புத் தொகை கி
மேற்கொண்டு நடைமுறைப்படுத்தியவர். முன்பள்ளி
சார்பற்ற நிறுவனங்களையும் தனியார் துறையின
பூர்வமாகச் செயற்பட்ட செல்வி.ஜெயா தம்பையா அ
பெற வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் முன்பள்ளிகளி
தொழிற்படுவார் என எதிர்பார்க்கின்றேன்.

"வாழக் கல்மின்"

**முத்து இராதாகிருஷ்**
**வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்**

## ஓய்வுக்காலம் சிறக்

வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப்பிள்ளை
செல்வி.ஜெயா தம்பையா அவர்களின் 60 ஆவது அ
வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்
யைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ்.பல்கலைக்
சிறப்பாகக் கற்று பட்டம் பெற்றவர். ப.க.கழகத்தில் தெ
தொடர்ந்து வருவது வள்ளுவம் வரைந்தது போல் நெஞ்
நட்பு என்பதை வெளிக்காட்டி நிற்கின்றது. எமது குடு
மானவர். எனது வாழ்வின் பல இடங்களிலும் இவரத
ஆழத்தை வெளிப்படுத்தி நின்றன.

ஆரம்பத்தில் நுவரெலியாவில் தனது ஆசிரியப் ப
யாழ்/வேம்படி மகளிர் கல்லூரியில் நாம் இருவரும் சே
முடியாதவை. அதன் பின்னர் வடமாகாண கல்வி அமை
பதவி உயர்ந்து இன்று சேவை ஓய்வு பெறுகின்றார். நாம்
போராட்ட காலம். ஆதலால் கல்வியோடு எமது சமூக
அக்கால மாணவர் அமைப்பு செயற்பட வேண்டியிருந்
சேவையையும் மேற்கொண்ட இவர் பாரதியார் கண்
யாற்றி வருகின்றார். இவரது குடும்ப உறுப்பினர்கள் அ
போது இவர் இங்கு தனது சேவையை எமது தாய் ம
உடையவர். இத்தகைய பல்துறை ஆர்வம் உள்ள ஜெய
சென்றாலும் அவரின் சேவையை எமது கல்விச் சமூக

**கலாநிதி திருமதி.ஜெயலக்சுமி**
**தலைவர், கல்வியியற்றுறை, யாழ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர் பணிப்பாளர்
# ா சிறப்பிதழ்

## ணைவேந்தர் வாழ்த்து

ிள்ளைப்பருவ மேம்பாட்டு கல்விப் பணிப்பாளர் செல்வி.
ம் இவ்வேளை பெறுமதியானது. சமூக மேம்பாட்டில்
ாக முன் பிள்ளைப்பருவம் விளங்குகின்றது. இப்பருவ
ாண கல்வியமைச்சில் தனியான அலகு அமையப்
ற்றில் மைல்கல் எனலாம். அதன் தொடக்கப் பணிப்
ால் பெருமை சேர்த்தவர் செல்வி.ஜெயா தம்பையா.
தின் புவியியல் சிறப்புக்கலை தேர்ச்சியுடன் தேசியப்
யர் கல்வியியல் பயில் அனுபவங்களுடன் கல்வி
கொண்டவர் ஜெயா.
ப்பில் உள்ளும் புறமுமாய் தெளிவற்று விளங்கும்
ன நிர்வகிப்பதில் சந்தித்த சவால்களை ஆளுமையுடன்
மயில் மாகாண முன்பள்ளிக்கல்வி கொள்கை வகுப்பு
செம்மையிலும் அவர் அர்ப்பணிப்பான பணியழகு வெளிப்
ாக்காணும் ஜெயா தம்பையாவின் பணி ஓய்வுக்காலம்,
றைந்திட எல்லையிலாத அன்பு வாழ்த்துக்கள்.

**ர். கலாநிதி என் .சண்முகலிங்கன்**
**முன்னாள் துணைவேந்தர்,**
**ழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## ச்சிக்கு அயராது உழைத்த பெண்மணி

பயா அவர்களின் சேவை நலன் பாராட்டு
செய்தி எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடை
ஜயா தம்பையாவுடன் நான்கு தசாப்தங்களாகத்
உள்ளேன். முதலில் யாழ்ப்பாணப் பல்கலைக்
ணவியாக விளங்கினார். பின் கல்விப் புலத்தில்
கருத்தரங்குகளிலும் கல்விசார் நிகழ்ச்சிகளிலும்
புகளும் கிடைத்தன.
ம்ப காலத்தில் முன்பள்ளிக் கல்வித் துறையில்
ரணமாக இத்துறை தொடர்பாகத் தன் அறிவை

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் முன்பள்ளிக்
ஆசிரிய வாண்மை வளம், பௌதீக வளம்,
போன்றவற்றில் பல பிரச்சினைகள் எதிர்
முன்பள்ளித்துறை வளர்ச்சி பெறாதிருந்ததால்
ட்டை முன்னெடுப்பது கடினமாகும். இதனால்
ருத்தி பொதுவான கல்வி வளர்ச்சிக்கும் சமூக
கொடுக்கும் என்ற தெளிவான சிந்தனையுடன்
கச் செய்தார். வடக்கு-கிழக்கு மாகாணங்களில்
ல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்
வார்.
ல் சமூகப் பணிகளிலும் முழு அர்ப்பணிப்புடன்
பயா அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும்
ம் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.
உடல் நலத்துடன் வாழ எல்லாம் வல்ல இறைவன்

**் பொ.பாலசுந்தரம்பிள்ளை PhD Durhan**
**ராசிரியர்/முன்னாள் துணைவேந்தர்,**
**ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## ிக்கல்வியை முனைப்புடன்
## ிய அம்மணிக்கு வாழ்த்துக்கள்

ணைந்திருந்தபோது முன்பள்ளிகளின் உதவிப் பணிப்
ணம் தனித்துவமாக இயங்கும் போது இற்றைவரை முன்
செயற்பட்டுள்ளார். முன்பள்ளிக்கான பாட விதானத்
வழிகாட்டியினையும் தயாரித்து நடைமுறைப்படுத்
ர். ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சி நெறிகளை
களின் வாண்மை விருத்திக்காக அயராது பாடுபட்டவர்.
மைச்சில் ஒருங்கிணைத்து பதிவு செய்து மாகாண
தவிப்புத் தொகை கிடைப்பதற்கான சிபார்சுகளையும்
த்தியவர். முன்பள்ளிகளின் விருத்திக்காக அரச, அரச
தனியார் துறையினரையும் ஒன்றிணைத்து ஆக்க
ஜெயா தம்பையா அவர்கள் வளமான நீண்ட வாழ்வு
தும் முன்பள்ளிகளின் வளர்ச்சிக்கு ஆலோசகராகத்
கின்றேன்.
"வாழக் கல்மின்"

**த்து இராதாகிருஷ்ணன்**
**ிப் பணிப்பாளர், யாழ்.கல்வி வலயம்.**

## க்காலம் சிறக்கட்டும்

சின் ஆரம்பப்பிள்ளை அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர்
களின் 60 ஆவது அகவையையொட்டி பத்திரிகையில்
பெருமகிழ்வடைகின்றேன். முல்லைத்தீவு குமுழமுனை
இவர் யாழ்.பல்கலைக்கழகத்தில் புவியியல் பாடத்தைச்
ர். ப.க.கழகத்தில் தொடங்கிய எம் நட்பு இன்றுவரை
வரைந்தது போல் நெஞ்சத்து அகம் மகிழ்ந்து உறவாடும்
றுகின்றது. எமது குடும்ப உறவுகளுடன் மிக நெருக்க
இடங்களிலும் இவரது செயற்பாடுகள் எமது அன்பின்
ன.
ில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து அதன்பின்
ில் நாம் இருவரும் சேவையாற்றிய காலங்கள் மறக்க
மாகாண கல்வி அமைச்சில் முன்பள்ளி பணிப்பாளராகப்
ய்வு பெறுகின்றார். நாம் ப.க.கழகத்தில் கல்வி கற்றகாலம்
வியோடு எமது சமூகத்தின் பல பிரச்சினைகளுக்குள்
யற்பட வேண்டியிருந்தது. அவ் வகையில் சிறந்த சமூக
இவர் பாரதியார் கண்ட புதுமைப் பெண்ணாக சேவை
ப உறுப்பினர்கள் அனைவரும் வெளிநாடுகளில் உள்ள
வையை எமது தாய் மண்ணுக்கு ஆற்றுவதில் விருப்பம்
ஆர்வம் உள்ள ஜெயா அவர்கள் இன்று ஓய்வு பெற்றுச்
எமது கல்விச் சமூகம் வேண்டி நிற்கின்றது.

**திருமதி. ஜெயலக்சுமி இராசநாயகம்,**
**வியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்.**



# செல்வி ஜெயா தம்பையா

BA(Hons) Dip in Edu, MEd

பிறப்பு: 13.05.1961

**ஆரம்பக் கல்வி:** மு/குமுழமுனை மகாவித்தியாலயம்

**இடைநிலைக் கல்வி:** மு/வித்தியானந்தாக் கல்லூரி

**உயர் கல்வி:**
B.A(Hon) in geography - University jaffna 1980-1984

**தொழில் கல்வி:**
Dip.in edu University of jaffna 1993-1994
MEd University of Jaffna 2014/2015

**ஆசிரியர்** SLTS-I
நு/இராகலை தமிழ் வித்தியாலயம்-முதல் நியமனம் 26.012.1985
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம் 01.04.1990
யா/வேம்படி மகளிர் கல்லூரி 01.04.1991-04.12.1996

**பாட இணைப்பாளர் (புவியியல்):**
ஆய்வு அபிவிருத்தி பிரிவு கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை - 1996/1997

**செயற்றிட்ட அலுவலகர்:**
ஆய்வு அபிவிருத்தி பிரிவு வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு திருகோணமலை 1997-1998

**உதவிக்கல்விப் பணிப்பாளர்:**
ஆரம்பப்பிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவு கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடக்கு கிழக்கு மாகாணம். 1999-2006

**உதவிக்கல்விப் பணிப்பாளர்:**
ஆரம்பப்பிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவு கல்வி அமைச்சு வட மாகாணம் 2006-2011

**பணிப்பாளர்:**
ஆரம்பப்பிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவு கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம் வட மாகாணம், 2011-2021 வரை

## வாழ்த்துக்குரியவர்

வடக்கு-கிழக்கின் முன்பள்ளிகளின் குழந்தைகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எல்லோரதும் பாராட்டுக்கும் வாழ்த்துக்குமுரிய பணிப்பாளர்
"வாழ்க வளமுடன் தொடர்க சேவைகளை"
காண்போம் வடலிகளின் வானுயர்வை"

**பேராசிரியர்: த.மோகனதாஸ்**
**முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.**

## "மழலைகளின் வழிகாட்டி"

செல்வி.ஜெயா தம்பையா அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். பல வருடகாலமாக முன்பள்ளித் துறையில் அனுபவமிக்க செல்வி.ஜெயா தம்பையா அவர்கள் பல்வேறு வகையான முன்னெடுப்புக்களின் மூலம் முன்பள்ளிகளை ஒரு அமைப்பினுள் கொண்டு வந்த பெருமைக்குரியவர். முன்பள்ளி ஆசிரியர்களை வாண்மைத்துவப்படுத்துவதில் அவர் நீண்டகாலமாகச் செயற்பட்டவர்.. வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்ட காலத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட அவரது முன்பள்ளிகளுக்கான சேவைகள் தற்போது வரை நீட்சி பெற்றுள்ளது என்றால் உண்மையிலேயே அவரது ஆளுமையை புடம் போட்டுக்காட்டுகின்றது. முன்பள்ளிகளின் செயலாற்றுகைகளை வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் பின்னர் வடக்கு மாகாணத்திலும் செழுமைப்படுத்தியதில் இவரின் பங்கு அளப்பரியது.

தாய் மொழிக் கல்வியே சிந்தனைக்கு வித்திடும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட செல்வி.ஜெயா தம்பையா அவர்கள், ஆங்கிலக் கல்விக்கும் முன்னுரிமை வழங்க வேண்டுமென்பதில் கவனம் செலுத்தினார். அதேவேளை பிள்ளைகளுக்கு எதையும் வலிந்து திணிக்கக் கூடாது என்பதில் உறுதியாக செயலாற்றிய அதேவேளை பல சவால்களையும் சந்தித்தவர்.

அவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் செல்வி.ஜெயா தம்பையா அவர்களின் சுயநலமற்ற அர்ப்பணிப்பான சேவை தொடர வேண்டுமெனவும் கல்விச்சமூகம் அவரது அனுபவத்தையும் பட்டறிவையும் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி என் சார்பிலும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் சார்பிலும் இறைவனை வேண்டுகின்றேன்.

**சு.பரமானந்தம், பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

## அகிலம் போற்றும் சேவையாளர்

மணிவிழா நாயகி. வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இருந்த காலத்தில் ஆசிரியப் பணியில் இருந்து ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு முன்பள்ளிக் கல்வி அபிவிருத்திக்காக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றியவர். முன்பள்ளிக்கென தனியான ஒரு அலகு உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றமை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மட்டுமே என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

தமக்கெனக் கொடுக்கப்பட்ட பொறுப்பினை திருத்தமாகவும், ஆக்கபூர்வமாகவும் செய்து முடித்தமை மட்டுமன்றி, முழுமையான அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் பணியாற்றிய பெருமைக்குரியவரான மணிவிழா நாயகி செல்வி.ஜெயா தம்பையா அவர்கள் தமது ஓய்வுக் காலத்தின் பின்னர் நீண்டகாலம் சுக வாழ்வு வாழ்ந்து மேலும் எமது சமூகத்திற்கு தம்மால் இயன்ற சேவைகளைத் தொடர வாழ்த்துகின்றேன்.

**சி.புஸ்பலிங்கம்**
**ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி.**

## வடமாகாண முன்பள்ளியின் தாய்

சிறந்த கல்லூரி ஆசிரியராக அரச பதவியில் கால்பதித்து பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணம் ஒரு நிர்வாக கல்வி அலகாக இருந்த வேளையில் 1998 ஆம் ஆண்டிலிருந்து வடக்கு- கிழக்கு மாகாண ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பணிப்பாளராக நியமனம் பெற்று 24 கல்வி வலயங்களின் முன்பள்ளிக் கட்டமைப்பை உருவாக்கி அதனை வலுவுடன் திறம்படச் செய்தது மட்டுமல்லாமல் சிறந்த வளவாளராகவும் சிறந்த நிர்வாகியாகவும், சிறந்த முகாமையாளராகவும் கள நிலைமைகளுக்கு ஏற்ப தனது ஆளுமையால் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், கற்கை நெறிகள் என்பவற்றை செயற்படுத்தியதோடு உள்நாடு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த முன்பள்ளிசார் நிபுணர்களுடன் இணைந்து செயற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் முன்பள்ளிக் கலைத்திட்டம், ஆசிரியர் பயிற்சிகள், முகாமைத்துவக் குழுக்களுக்கான யாப்பு மற்றும் பயிற்சிகள் பெற்றோருக்கான வழிகாட்டல் மற்றும் செயலமர்வுகள் கைநூல்கள் என்பவற்றைத் திறம்பட செயற்படுத்தி வருபவர். மேலும் முன்பள்ளிக் கண்காட்சிகள், கலை நிகழ்வுகள் என்பவற்றை அனைத்து பிள்ளைகளும், ஆசிரியர்களும் அனுபவம் பெறும் வகையில் நடைமுறைப்படுத்தி வருபவர். முன்பள்ளிக்கான நியதிச்சட்டத்தை உருவாக்கியவர் என்பதோடு அதற்கான ஒழுங்கு சட்டம் என்பவற்றை வரைந்து நிறைவேற்றும் நிலையில் வைத்திருப்பவர். முகாமைத்துவத் திறன்வாய்ந்த சிறந்த ஆளுமையுடன் சேவையாற்றியவர். இத்தகைய முன்பள்ளிசார் அரும் பெரும் பணியாற்றிய செல்வி.ஜெயா தம்பையா அவர்களை மணிவிழா வேளையில் வாழ்த்துகின்றோம்.

**திரு.க. சத்தியசீலன், மணிவிழா தலைவர்**
**வடமாகாண முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சார்பாக**

## ஜெயம் கொண்டாள்

நடந்திட்ட பாதைகளோ கரடுமுரடாய்த் தெரிய
கடந்திட்ட உயர்வுகள் கண்ணெதிரே மிளிர
வடக்கின் முன்பள்ளிகள் பணிப்பாளரால் ஒளிர
சிறந்திட்ட உன்சேவை அவை அறுபதில் பிரிய

படர்ந்திட்ட நினைவுகள் பகலவனாய் நிற்கும்
வளர்ந்திட்ட உன்பெருமை வருங்காலம் சொக்கும்
தொடர்ந்திட்ட சாதனைகள் போதனைகள் செய்யும்
புரிந்திட்ட காரியங்கள் புகழ் மணக்கச் சொல்லும்

வளர்த்திட்ட மொட்டுக்கள் விரைந்தொருநாள் அவிழும்
வரைந்திட்ட ஓவியங்கள் உயிர்பெற்றே உலவும்
நகைதொட்ட உன்வதனம் நலமோடு குலவும்
தொழுதிட்ட தெய்வங்கள் தொலைதூரம் உதவும்

**A.S. சற்குணராஜா, பிரதிக்கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்.**

## முன்பள்ளிகளின் அன்னை

முல்லைக் குமுழமுனை ஈன்றெடுத்த செல்வி.ஜெயகுமாரி தம்பையாவின் மணிவிழாவுக்கு வாழ்த்துக் கூறுவதில் பூரிப்படைகின்றேன். இவரது சேவைக்காலம் "முன்பள்ளிகளின் பொற்காலம்" ஆகும். புன்சிரிப்பும் நிமிர்ந்த நடையும் சேவை மனப்பாங்கும் நல்ல தொடர்பாடலும் இலட்சியப் போக்கும் அவரது ஆளுமையின் வெளிப்பாடே!

மழலைகளின் ஆற்றல்களை வெளியுலகுக்குக் கொண்டுவரும் நோக்கில் மாகாண, வலய, கோட்ட மட்டங்களில் கண்காட்சி, கலைவிழா, விளையாட்டு நிகழ்வுகள் சிறந்த முறையில் திட்டமிட்டு ஒழுங்கமைத்து வருடம்தோறும் சிறப்பாக நடத்தி வந்தார். ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்குவிக்க "புன்சிரிப்பு" சஞ்சிகை வெளிவந்தது. கொரோனாக் காலத்தில் மழலைகளின் கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க "வீட்டை அடிப்படையாகக் கொண்ட கல்விச் செயற்பாடு" செயல்நூல் வெளியிட்டு முன்பள்ளிகளுக்கு வழங்கி ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பயிற்சியளித்தார். முன்பள்ளிகளின் மேற்பார்வை, ஆசிரியர் செயலமர்வுகளில் தானும் ஆசிரியர், மாணவர் போன்று ஒருமித்து செயற்பாடுகளைச் செய்து எல்லோர் மனங்களையும் கொள்ளை கொண்டவர். **"இவரே முன்பள்ளிகளின் அன்னை"** என்றால் மிகையாகாது. அன்னையின் சேவைக்காலத்தில் நாமும் ஒன்றிணைந்து பக்கபலமாகச் செயற்பட்டதால் பெருமையடைகின்றோம். ஓய்வுக்காலத்தில் முன்பள்ளிகளுக்கும் மற்றும் ஏனைய சமூக அமைப்புக்களுக்கும் சமூகசேவை செய்து சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**திரு.சி.தில்லைநாதன்- வடமராட்சி**
**முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் சார்பாக**

## மழலைகளை மகிழ்வித்த நாயகியே வாழி!

ஆசானாக கல்விப் புலத்திலே காலூன்றி இணைந்த வட-கிழக்கு மாகாண முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பின்னர் வடமாகாண முன்பள்ளிப் பணிப்பாளராகவும் கடமையாற்றி சேவையில் நிறைவு காணும் செல்வி.ஜெயா தம்பையாவின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

"யாவர்க்கும் கல்வி" என்ற கோஷம் வலுப்பெற்றிருக்கும் இக்காலத்தில் மழலைப் பருவத்திலுள்ள அனைவரும் முன்பள்ளிக்குச் சேர்வதற்கு வழிகாட்டிய பெருமை செல்வி. ஜெயா தம்பையாவையே சாரும். காலக்கழிவினால் அவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவரது பணி என்றும் எம்மண்ணில் நிலைத்திருக்கும். அவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**வ.செல்வராசா**
**ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்.**

## நல் பணியாளர்

பணிப்பாளராய் பணி செய்து
பல செயற்றிட்டங்கள் முன்னெடுத்து
பாலர் கல்வி விருத்திக்காய்
பல விதப்புரைகள் தாம் உரைத்து
இணைப்பாளர் இன்னல்கள் தாமுணர்ந்து
இதமாக உரையாடி ஊக்குவித்த
எம் இனிய அன்னையே
என்றும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**வடமாகாண முன்பள்ளி, கோட்ட இணைப்பாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள்.**

(C-2142)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி ஞாயிறு சிவசுப்பிரமணியம்



மறைந்தார் மாண்பு

ஈழத்தின் புகழ்பூத்த ஆங்கில விற்பன்னராக திகழ்ந்த மொழி ஞாயிறு சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் அண்மையில் இறைபதம் அடைந்தார்.

மிகப்பெரும் ஆளுமையாக திகழ்ந்து பல்துறைசார் அறிஞர்களென நாம் அண்ணாந்து பார்க்கின்ற அத்தனைபேரும் அண்ணாந்து பார்த்த பெருமைக்குரியவர்.

அன்னார் 1944ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி சின்னத்தம்பி- உமையாள் தம்பதியினரின் புதல்வனாக பிறந்தார்.

புற்றளை சாரதாபீட வித்தியாசாலையிலும், ஹாட்லிக் கல்லூரியிலும் கற்று பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு ஆகிய மூன்று மொழிகளிலும் தோற்றிலண்டன் இளங்கலைமாணிப் பட்டதாரியானார்.

தந்தையாரின் வழிகாட்டலிலே ஆங்கிலச் சிறுகதைகளைக் கற்பதனை வழக்கமாகக் கொண்டு ஆங்கிலத்தில் ஆர்வம் கொண்டவர்.

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் அருட்தந்தை டேவிட்டிடமும் யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர்களான முனைவர் பீற்றர், முனைவர் மேரி ஜோர்ஜ், முனைவர் ஜோன், முனைவர் திருமதி. றோஸ் டேவிட் ஆகியோரிடமும் ஆங்கில இலக்கண இலக்கியங்களை ஐயம்திரிபறக் கற்று அத்துறையில் தன்னை மிகவும் வளர்த்துக் கொண்டதனூடாக ஈழத்தின் புகழ்பூத்த ஆங்கில விற்பன்னர்களில் முக்கியமானவராக திகழ்ந்தார்.

அத்துடன் தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனாரிடம் கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், மணிமேகலை, நாலடியார், கலித்தொகை ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு முதலானவற்றை நயத்துடனும் ஆழத்துடனும் பெற்றுக் கொண்டார்.

இதனாலே இத்தமிழ் இலக்கியங்களின் சுவைகளை நுகரும் பாக்கியத்தினை இவரது ஆங்கில வகுப்புக்களில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

இவற்றினோடு **Romeo and Juliet, Mac Beth, Julius Cisar, Henry the fourth** ஆகியவற்றின் கதைகளையும் மாணவர்கள் சுவைபட அறிந்துகொள்வர். இவ்வரப் பிரசாதம் இவர் போன்ற ஒரு சிலரது வகுப்பில் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கே கிட்டியது.

புலோலியில் ஆரம்பித்த இவரது கல்விப் பணி, வடமராட்சி, யாழ்ப்பாணம், வன்னி எனப் பரந்து சென்னை லயோலாக் கல்லூரி வரை விரிந்து சென்றது.

சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் கவிஞர் மேத்தாவின் அறிமுகத்தோடு சென்னை லயோலா கல்லூரியிலே இணைந்தவர்.

அங்கு ஆங்கிலத்துறை தலைவராக இருந்த பேராசிரியர் சோமசுந்தரம் முதலான பல பேராசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் தன்னுடைய விரிவுரை வகுப்புகளிலே அமர்த்தி வைத்த பெருமைக்குரியவர்.

உலக அரங்கிலே பிரகாசித்துக் கொண்டிருக்கும் பல்துறை விற்பன்னர்களுக்கும் இவர் இறுதிக்காலம் வரை வழிகாட்டியாகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையிலே பேராசிரியர்கள், நீதிவான்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், பொறியியலாளர்கள், சட்டவாதிகள், நிர்வாகிகள், கணக்காளர்கள் எனப் பல துறையினரும் இவரின் பெயரைச் சொல்லிப் பெருமை கொள்வது காலத்தின் கொடையாகும்.

இப்பேற்பட்ட பெருமை மிக்க ஆங்கில விரிவுரையாளர் சி. சிவசுப்பிரமணியத்தின் நினைவுகள் என்றும் மனங்கொண்டு போற்றப்பட வேண்டியனவாகும்.

**தென்புலோலியூர் பரா. றமேஸ்**

# பங்காளிக் கட்சிகளுடனான சந்திப்பை புறக்கணித்தார் விமல்

(கொழும்பு)

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் பங்காளி கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பு, அலரிமாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

அதில், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான அமைச்சர் விமல் வீரவன்ச பங்கேற்கவில்லை.

பங்காளி கட்சிகளின் தலைவர்களுடன் இவ்வாறான சந்திப்புகளை ஏற்கனவே புறக்கணித்திருந்த அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். அத்துடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ்ும் பங்கேற்றிருந்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், பிரதமருடன், அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியோரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் பங்கேற்றிருந்தனர். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2312

### ஜெயபாலன்

இழந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளலாம்...
இழந்த காலத்தை ஒருபோதும் பிடிக்க முடியாது




### இந்திரநாதன்

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது இதயத்தின் ஓசை
சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது சக்தியின் பிறப்பிடம்
விளையாட நேரம் ஒதுக்குங்கள்
அத இளமையின் இரகசியம்
படிக்க நேரம் ஒதுக்குங்கள்
அது அறிவின் ஊற்று
நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள்
அது மகிழ்ச்சியின் வழி
உழைக்க நேரம் ஒதுக்குங்கள்
அது வெற்றியின் விலை


### ஜெயந்தி

கோபமான கேள்விகளுக்குக்கூட கனிவான பதில்களைத் தருகிறார்கள் என்றால் கோபப்படத் தெரியாதவர் என்பதல்ல... அவர்களின் கோபத்தைவிட உங்களின் உறவை முக்கியமாகக் கருதுகிறார் என்று அர்த்தம்



### லோகநாதன்

இரவுக்குப் பின் பகலைத் தருகின்ற இறைவன்
குளிருக்குப் பின் வெயிலைத் தருகின்ற இறைவன்
நிச்சயம் ஒவ்வொரு துன்பத்திற்குப் பின்
இன்பத்தையும் தருவான்




### ஆறுமுகம்

உண்மை இல்லாத இடத்தில்
உரிமை கேட்பது தவறு!
உரிமை இல்லாத இடத்தில்
பாசம் வைப்பது தவறு!
பாசம் இல்லாத இடத்தில்
பழகுவதும் தவறு!
இதைப்புரிந்தால்
வாழ்க்கையில்
ஏமாற்றம் இருக்காது

### ஸ்ரீதேவி

நிதானமாய் யோசி... நிதானத்தின்
ஆழத்தில்தான் எல்லாப் பிரச்சினைகளுக்கும்
விடை ஒளிந்து கிடக்கிறது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாகாணங்களுக்கிடையான போக்குவரத்திற்கு

# துணை வீதிகள் பயன்படுத்தினால் கடுமையான சட்ட நடவடிக்கை



(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களை கண்காணிப்பதற்காக பொலிஸார் , பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது அத்தியாவசிய தேவையின்றி போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன்போது பொலிஸார் , முப்படையினர், சுகாதாரப் பிரிவினர், ஊடக நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள், தனியார் மற்றும் அரச துறையில் அத்தியாவசிய சேவை பிரிவில் பணி புரிபவர்கள் தங்களது தொழில் அல்லது அலுவலக அடையாள அட்டையை காண்பித்து பயணிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

எவரேனும் சட்ட விரோதமான முறையில், துணை வீதிகளை பயன்படுத்தி மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட விடுமுறைகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டுள்ளன. அதனால் விடுமுறையில் சென்றுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் பணிக்கு வருகை தர வேண்டும்.

எனினும் கொவிட் வைரஸ் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் பணிக்கு திரும்பவேண்டிய அவசியமில்லை. தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்ததன் பின்னர் அவர்கள் பணிக்கு சமுகமளிப்பது போதுமானது.

இதேவேளை, தனிமைப்படுத்தல் சட்ட விதிகளுக்கு புறம்பாக செயற்படும் நபர்களை அடையாளம் காணுவதற்காக பொலிஸார் சீருடை மற்றும் சிவில் உடைகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் ட்ரோன் கமெராக்கள் உள்ளிட்ட தொழில்நுட்ப சாதனங்கள் ஊடாகவும் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-4)

## 100 பேருக்கான இடவசதி உள்ள இடங்களில் 25 பேரை மாத்திரமே அனுமதிக்க முடியும்

# மீறினால் வழக்கு



(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் பரவல் தீவிரமாக பரவலடைந்து வருகின்ற நிலையில் வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கான காலப்பகுதிகளில் சேவை நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான வாடிக்கையாளர்களை மாத்திரமே அனுமதிக்க முடியும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதற்கமைய 100 பேருக்கான இடவசதிகள் காணப்படும் நிலையமொன்றுக்குள் 25 பேர் மாத்திரமே அனுமதிக்க முடியும்.

அதனைவிட அதிகமானவர்கள் அனுமதிக்கப்பட்டால், அந்த நிறுவனங்களின் உரிமையாளர்கள் , பணிப்பாளர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படும்.

இதேவேளை தாம் இருக்கும் மாகாணத்தை தவிர பிறிதொரு மாகாணத்தில் உள்ள ஹோட்டல்களில் தங்குவதற்கான வசதிகளும் செய்துகொடுக்கப்படமாட்டாது.

அவ்வாறு ஏதேனும் ஒரு ஹோட்டலில் வெளி மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தங்குவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

எனினும் அத்தியாவசிய தேவை நிமித்தம் உரிய பிரதேசத்திற்கான சுகாதார பிரிவினர் மற்றும் பொலிஸாரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு தங்குவதற்கான அனுமதியுள்ளது என பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இரண்டு மலைகள்

ஒரு பெரியவர் சொன்னார் கடுகு அளவு என்னிடம் நம்பிக்கை இருந்தால் கூட போதும் என்று .ஒரு பெரிய மலையையே புரட்டலாம் என்றார். அது எப்படி முடியும் என்று நான் யோசிக்க ஆரம்பித்தேன்.

நம்பிக்கை ஊட்ட வேண்டும் என்பதற்காக கொஞ்சம் மிகைப் படுத்தி சொல்கின்றீர்கள் என்று நினைக்கின்றேன் என்றேன். அப்படி இல்லை, இந்தக் கதையைக் கேள் என்று ஆரம்பித்தார்.

அது சீன தேசத்துக்கதையாம். (பல ஆண்டுகள் சீன அதிபராக இருந்த மாசேதுங்– பொதுக் கூட்டங்களில் மக்களுக்கு இந்தக் கதையைச் சொல்வது வழக்கமாம்).

அந்த தேசத்தில் ஷாங்காய் மாநிலத்தில் ஒரு சின்ன கிராமம். அந்த கிராமத்தில் ஒரு வயதான ஆள் இருந்தார். அவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். அவர்கள் வீட்டு வாசலின் முன் வழியை இரண்டு பெரிய மலைகள் அடைத்துக் கொண்டிருந்தது.

எப்பாடு பட்டாவது அந்த இரண்டு மலைகளையும் இடித்துத் தள்ளி அதைத் தரைமட்டம் ஆக்கிவிட முடியும் என்பது அவருடைய நம்பிக்கை. உடனே செயலில் இறங்கினார்.

இரண்டு பிள்ளைகளையும் சேர்த்துக் கொண்டார். கடப்பாறைகளை எடுத்துக் கொண்டார். உடைக்க ஆரம்பித்தார்.வயதான காலத்தில் இப்படி பிள்ளைகளோடு உட்கார்ந்து கொண்டு இவர் மலையை உடைகின்றதை அந்த வழியாக போகின்றவர்கள், வருகின்றவர்கள் எல்லாம் பார்த்தார்கள். அவர்களுக்கு சிரிப்புத் தான் வந்தது.அந்த பெரியவருக்கு வேண்டிய ஒரு ஆள் சொன்னார்.

நீங்கள் செய்யும் வேலையில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? மலை எவ்வளவு பெரிது.அதை நீங்கள் மூன்று பேரும் சேர்ந்து உடைத்துத் தள்ளி விட முடியுமா? பேசாமல் இதை விட்டுவிட்டு வேறு ஏதாவது உருப்படியான வேலை இருந்தால் அதைச் செய்யுங்கள் என்றார்.

அந்தப் பெரியவருக்கு ஆவேசம் வந்துவிட்டது. என்ன சொன்னீர்கள்? நாங்கள் மூன்று பேர் தானே இருக்கின்றோம் என்பதனால் தானே அப்படிச் சொல்கின்றீர்கள்? அதனால் என்ன?

நானும் என் பிள்ளைகளும் ஆரம்பித்த இந்த வேலையை முடிக்க முடியாமல் நான் இறந்துவிட்டால் என்னுடைய பிள்ளைகள் இந்த வேலையைத் தொடர்ந்து செய்வார்கள். அவர்களும் இறந்துவிட்டால், என் பேரப்பிள்ளைகள் இந்த வேலையைத் தொடர்ந்து செய்வார்கள்.

இப்படி வாழையடி வாழையாக இந்த வேலை தொடரும்.ஒரு கட்டத்தில் இந்த இரண்டு மலைகளும் தரை மட்டமாகும். இப்போதைக்கு இது இரண்டும் பெரிய மலைதான் அதை ஒப்புக் கொள்கின்றேன்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் இது ஒரு அங்குலம் கூட வளரப் போவதில்லை. ஆகையினால் நாங்கள் உடைக்க உடைக்க அது குறைந்து கொண்டே தான் வரும்.என்றாவது ஒரு நாள் என்னுடைய வாரிசுகள் இந்த மலைகளைத் தரை மட்டமாக்குவார்கள். வாசல் வழியை நன்றாக அமைத்து விடுவார்கள் அந்த நம்பிக்கை எனக்கு உண்டு. என்று சொல்லி விட்டு தொடர்ந்து மலையை உடைக்க ஆரம்பித்தார். இவருக்குப் போய் புத்தி சொல்ல ஆரம்பித்தோமே என்று புலம்பிக் கொண்டே வந்தவர்களும் போய் விட்டார்கள்.

மலை உடைக்கின்ற வேலை தொடர்ந்து நடந்தது. இரவு, பகலாக நடந்தது. இவர்கள் படுகின்ற பாட்டை பார்த்துவிட்டு கடவுளே யோசிக்க ஆரம்பித்தார். இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தார். அவர்களுடைய உழைப்பையும்–உழைப்பின் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கையையும் இரண்டு தேவதைகள் ஆக்கினார்.ஒரு நாள் இரவோடு இரவாக அந்த இரண்டு மலைகளையும் அகற்றும் படியாக உத்தரவு போட்டார்.

ஒரு நாள் காலையில் விடிந்து எழுந்து பார்க்கிறார்கள்.மலை இருந்த இடம் காலியாக இருக்கின்றது. பெரியவரும் அவருடைய பிள்ளைகளும் மகிழ்ச்சி அடைந்தார்களாம்.இந்தக் கதைக்கு விளக்கம் என்னவென்றால் அந்த இரண்டு மலைகளும் என்ன தெரியுமா? ஒன்று–வறுமை, இன்னொன்று–பற்றாக்குறை.

அந்த இரண்டு தேவதைகளும் யார் தெரியுமா? ஒன்று உழைப்பு, இன்னொன்று –நம்பிக்கை.

பொது மக்கள் தான்– கடவுள். திறமை–வலிமை–பொறுமை–இது தான் அந்த பெரியவர் அவருடைய இரண்டு பிள்ளைகள். உறுதியோடும் நம்பிக்கையோடும் செயற்பட்டால் எந்த விதத் தடையையும் உடைத்தெறிய முடியும் அப்படி என்பது இந்தக் கதையின் கருத்து.

ஒரு ஆள் மது அருந்திவிட்டு வருகின்ற வழியில் ஒரு பெரிய மலையில் தலையை முண்டு கொடுத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார் ஒருத்தர். அந்த வழியாக வந்த இன்னொருத்தன். ஏன்டா இப்படி நிற்கின்றாய் பேசாமல் தலையை எடு.வீட்டுக்குப் போய் படு என்றான். அதற்கு இவன் விவரம் தெரியாமல் பேசாதே நான் தலையை எடுத்து விட்டால் இந்த மலை சாய்ந்துவிடும்.அது தான் நேற்று இரவிலிருந்து இது சாயாமல் தாங்கிக் கொண்டிருக்கின்றேன் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 38 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்



திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

ஏறத்தாழ 60 பருவ வெளியீடுகளுடன் தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழிகளில் வெளிவரும் 25 பத்திரிகைகளும் இப் பகுதிக்கு வரவழைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தினமும் நூற்றுக்கணக்கான வாசகர்கள் இப்பகுதிக்கு வருகை தருவதை அவதானிக்க முடிகிறது. இதன் ஒரு பகுதி படிப்போர் கூடமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**4.படிப்போர் கூடம் (Self-Study Hall)**

பருவ இதழ்ப்பகுதியின் ஒரு பகுதியில் படிப்போர் கூடம் உள்ளது. பரீட்சைகளுக்குத் தயார் செய்வோர் நூலகத்தில் தகவல்களைத் தேடுவதுடன் குழப்பங்கள் இடையூறுகள் இல்லாமல் படிப்பதற்கு வசதியாகப் படிப்போர் கூடம் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் தமது சொந்த நூல் குறிப்புகளுடன் இருந்து படிக்க முடியும்.

**5.சிறுவர் நூலகம் (Children's section)**

சிறுவர்களிடையே வாசிப்புத் திறனை ஊக்குவிக்கவும் அறிவுத் திறனை வளர்ப்பதற்கும் சிறுவர் நூலகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஆங்கில மற்றும் தமிழ் நூல்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் பலதரப்பட்ட சிறுவர்களுக்கான கலைக் களஞ்சியங்கள், அகராதிகள், படப் புத்தகங்கள், பல உருவங்களில் வடிவமைக்கப்பட்ட நூல்கள் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.


அத்துடன் குழந்தைகளை ஊக்குவிப்பதற்குக் கணனியில் விளையாடவும் வசதிகள்செய்யப்பட்டுள்ளன. நூலக சேவைகள்யாவும் இக்காலப் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு நவீன மயப்படுத்த வேண்டியிருந்தது. அதன் முதற்கட்டமாக சிறுவர்பகுதியில் புதிய செயற்பாடாக சிறுவர்களிற்கு வசதியான நேரமான பிரதி சனிக்கிழமைகளில் கதை கூறும் நிகழ்வு நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டு முதலாவது நிகழ்வு 29.01.2011இல் ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இப் பகுதி சிறுவர்களை கவரக்கூடிய விதத்திலும் அவர்களுக்கு பயன் படக்கூடிய விதத்திலும் சிங்கப்பூர் சர்வதேச நிறுவனத்தால் நவீனமயப்படுத்தப்பட்டு, 29.07.2011இல் முன்னாள் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் ஜோஜ்ஜோவினால் நூலகத்திடம் கையளிக்கப்பட்டது. பாடசாலை இல்லாத வேளைகளில் பல குழந்தைகள் இப்பகுதியைப் பயன்படுத்துகின்றனர்.

**6. விசேட ஆவணவாக்கல் பகுதி- (Special Documentation Section)**

இப்பகுதியில் உள்ளூரில் வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றின் பிரதிகள், விசேட மலர்கள், காலத்திற்குக் காலம் வெளிவரும் சிறப்பிதழ்கள் என்பனவற்றைச் சேகரித்து ஆய்வுத் தேவைக்காகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அரசு வெளியீடுகளும் இங்கு சேகரிக்கப்படுகின்றன. இவை யாவும் கால ஒழுங்கில் தொகுதிகளாகக் கட்டப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. நூலகத்தில் அன்பளிப்பாகப் பழைய நூல்கள் கிடைக்கும் நேரங்களில் அரிதாக கிடைக்கக்கூடிய இவ்வாறான பத்திரிகைகள், சஞ்சிகைகளும் கிடைக்கின்றன.

அவற்றில் அரிதான ஆவணங்களாக இருக்கக்கூடியவை சேகரிக்கப்பட்டுத் தொகுதிகளாக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. அத்தோடு இலக்கியம், மருத்துவம், கலாசாரம் போன்ற துறை சார்ந்த பிற சஞ்சிகைகளும் இங்கு சேகரிக்கப்படுகின்றன. இப்பகுதி பல்கலைக்கழக மாணவருக்கும் ஆய்வு செய்வோருக்கும் மிகவும் பயனுடையதாக அமைகின்றது. இப்பகுதியில் பார்வையிழந்தோருக்கான ஒரு பிரிவு உள்ளது.





**7.வலுகுறைந்தோர்களுக்கான சேவை (Service to Disabled)**

இந்நூலகத்தினை வலு குறைந்தோர் பயன்படுத்துவதற்கு வசதியாக யாழ். நூலகம் புனரமைக்கப்பட்ட பின்னர் பல நவீன வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

உரிய சாய்வுப் பாதைகள் அமைத்தும், மின்தூக்கி (lift) அமைக்கப்பட்டும் இருக்கிறது. கண் பார்வையற்றோருக்கான பகுதி

## யாழ். நூலகம் - கூகிள் பார்வை



யானது விழிப்புலனற்றோர் சங்கத்தின் வேண்டுகோளிற்கு இணங்க 2015இல் யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் வசந்தி அரசரட்ணத்தினால்திறந்து வைக்கப்பட்டது.

அப் பகுதியில் கண் பார்வையற்ற மாணவர்களுக்கான பிரெய்ல் புத்தகங்கள், கணனி மற்றும், அவர்களுக்கான சாதனங்களும் காணப்படுகின்றன. வாசிப்புத் திறனை ஊக்குவிப்பதற்குப் புதிய சாதனங்கள் தேவைப்படுகின்றன.

**8.இந்தியா பகுதி (India Corner)**

இந்திய வரலாறு கலை கலாசாரம் சம்பந்தமான புத்தகங்களிற்கு என தனியான ஒரு பகுதியை இலங்கைக்கான இந்திய தூதுவர் சின்ஹா 08.12.2015இல் திறந்து வைத்தார். நூலகத்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் இப்பகுதியிலேயேயும் நூல்களை எடுத்துச் சென்று வாசிப்பதற்கு ஏற்ற வசதிகள் உள்ளன. அத்துடன் வாசகர்கள் அமர்ந்து குறிப்பு எடுக்கும் வசதியும் இப் பகுதியில் உண்டு.

இப்பகுதியில் ஏறத்தாழ 16,000 நூல்கள் கலை, கலாசாரம் மொழி, வரலாறு, நாவல்கள் என பல துறை சார்ந்து உள்வாங்கப்பட்டுள்ளது.

பட்டப்படிப்பு மற்றும் பட்டபின் படிப்பு மாணவர்களிற்கு மிகவும் பயனுடையதாக அமைகின்றது. இப் புத்தகங்களுள் ஒரு பகுதி இந்தியாவில் ஈரோட்டில் நடை பெற்ற புத்தக திருவிழாவின் போது நூலகத்திற்கு என சேகரிக்கப்பட்ட வையாகும். அவை 29.06.2017 இல் நூலகத்திடம் கையளிக்கப்பட்டது. இவற்றைவிட 18.09.2018 இல் தமிழ் நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையான் நூலகத்திற்கென 50,000 புத்தகங்கள் தந்து உதவியுள்ளார்.

**நூற்சேகரிப்பு பகுதி**

இது நூலகத்தின் கீழ்மாடிக்கும், முதலாம் மாடிக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. இப் பகுதியில் நூல்கள், சஞ்சிகைகள் சேகரிப்பு **(acquisition)**, நூல் பகுப்பாக்கம், கோஹா **(Koha)** எனும் மென்பொருளை பயன்படுத்தி நூல் பற்றிய தரவுகள் யாவற்றையும் கணனியில் தரவேற்றம் செய்தல், நூல்களிற்கு மட்டை கட்ட நடவடிக்கை எடுத்தல், சேகரிக்கப் பட்ட நூல்களை நூலகத்தில் உள்ள பகுதிகளுக்கும் மற்றும் கிளை நூலகங்களுக்கும் அனுப்புதல் போன்ற நூலக நடைமுறைகள் செயல்படுத்துத்தப்படுகின்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள் நடைபெறும் கட்டடங்களுக்கு தடை முத்திரை குத்தப்படும்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் பரவல் தீவிரமாகப் பரவலடைந்து வருகின்ற நிலையில் வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கான காலப்பகுதியில் மக்கள் ஒன்றுகூடல்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

மக்கள் ஒன்றுகூடல்களான விருந்துபசாரங்கள், கொண்டாட்ட நிகழ்வுகள் என்பவற்றை நடத்த முடியாது. இவ்வாறான நிகழ்வுகளை நடத்துவதற்காக இடவசதிகளை செய்து கொடுக்கும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், அந்தக் கட்டடங்களுக்குத் தடை முத்திரை குத்தப்படும்.

இதன்போது மதுபானங்களைப் பயன்படுத்தி ஏற்பாடு செய்யப்படும் விருந்துபசாரங்கள் தொடர்பில் கண்காணிக்கப்படுவதுடன், அந்தகைய நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் நபர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் ரம்ழான் பண்டிகை கொண்டாட்டங்களில் ஈடுபடுபவர்கள் தங்களது வீட்டில், அவர்களது குடும்பத்தினருடன் மாத்திரமே இணைந்து கொண்டாட வேண்டும்.

இதன்போது மக்கள் ஒன்றுகூடி பள்ளிவாசல்களுக்கு செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்



## விரதங்கள்

## துன்பங்களை போக்கும் பைரவர் விரதம்

இந்து சமயத்தில் பைரவர் வழிபாடு முக்கியமானது. சூரபத்மனை அழிப்பதற்காக. சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றியவர் முருகன். பிரம்மாவின் ஆணவத்தை அடக்குவதற்காக சிவனின் தத்புருஷ முகத்தில் இருந்து ஜோதியாக வெளிப்பட்டவர் பைரவர்.

காவல் தெய்வமான இவரும் சிவனைப் போல் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்து வருகிறார். திரிசூல பாணியான இவர் நீலநிற மேனியுடன் நிர்வாண கோலத்தில் நாய் வாகனத்துடன் காட்சி தருவார்.

சிவாலயங்களில் வடகிழக்கு திசையில் இவருத்துக் தனி சந்நிதி உண்டு. காலையில் ஆலயம் திறந்தவுடனும் இரவு அர்த்தசாமபூஜை முடியும் போதும் இவருக்கு விசேட பூஜைகள் நடைபெறும்.

பைரவர் என்றால் பயத்தை நீக்குபவர். தன்னை நாடி வரும் பக்தர்களின் பாவத்தைப் போக்குபவர் என்று பொருள். தினமும் வேதனையை அனுபவிப்பவர்கள், தாங்க முடியாத அளவிற்கு எதிரிகளால் துன்பம் அடைபவர்கள் அவற்றில் இருந்து விடுபட பைரவரை வழிபடலாம்.

விபத்து, துர் மரணம் இவற்றில் இருந்து காப்பவரும் பைரவரே. அந்த அளவிற்கு பைரவர் முக்கியத்துவம் வாய்ந்தவர்.

பைரவரைத் தொடர்ந்து வணங்கினால் தீவினைகள் அழியும். எதிரிகள் தொல்லை ஒழியும். யாருக்கும் அடிபணியாத, தலைகுனியாத வாழ்க்கை அமையும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும்.

நவக்கிரகங்களால் ஏற்படும் துன்பம் நீங்கும். வறுமை நீங்கி செல்வச் செழிப்பு உண்டாகும். இழந்த பொருள் செல்வத்தை மீண்டும் பெறலாம். திருமணத் தடை அகலும். தடைப்பட்ட அனைத்துக் காரியங்களும் நிறைவேறும். பிதுர் தோஷம் விலகும்.



### பைரவர் அவதாரம்

ஒரு காலத்தில் சிவனுக்கு ஐந்து தலைகள் இருந்தன. அதேபோன்று பிரம்மாவுக்கும் ஐந்து தலைகள் உண்டு. இதனால் சிவனை விட தானே சிறந்தவர் என்ற எண்ணம் பிரம்மாவுக்கு ஏற்பட்டது.

உடனே அவர் தேவர்களும் முனிவர்களும் ரிஷிகளும் தன்னையே வணங்க வேண்டும் என ஆணவத்துடன் கூறினார். இதனால் மனம் வருந்திய தேவர்கள் சிவனைத் தரிசித்து முறையிட்டனர். பிரம்மனின் ஆணவத்தை அடக்க திருஉளம் கொண்ட பரமேஸ்வரன் பைரவரைத் தோற்றுவித்தார்.

பைரவர் பிரம்மனின் ஒரு தலையை நகத்தினால் கிள்ளி எடுத்துத் தன் கைகளில் ஏந்தினார். இதனால் பைரவருக்கு பிரம்ம ஹத்தி தோஷம் ஏற்பட்டது.

அதைப் போக்க கபால ஓட்டையும் பிரம்மாவின் தலையையும் கையில் ஏந்தியடி உலகம் முழுவதும் பிச்சை எடுத்த வண்ணம் சுற்றிச் சென்றார்.

காசியில் அவர் நுழைந்ததும் அவர் கையில் இருந்த கபாலம் உடைந்தது. அன்று முதல் அங்கேயே இருந்து காசி [illegible] புரிந்து வருகிறார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித்துளிகள்

## 5 நாடுகளுடனான விமான சேவைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து ஐந்து நாடுகளுக்கான பயணிகள் விமான சேவைகள் நேற்று முதல் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி பிரிட்டன், இத்தாலி, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு பயணிகள் விமான சேவை முன்னெடுக்கப்பட மாட்டாது.

கொவிட்-19 தொற்று காரணமாக மேற்கண்ட நாடுகளில் இலங்கை பயணிகள் விமான சேவைக்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் மேற்கண்ட நாடுகளிலிருந்து பயணிகளின் வருகைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை, சரக்கு விமான சேவைகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். (நி-4)

## வந்திறங்கும் அனைவருக்கும் 14 நாட்கள் கட்டாய தனிமை

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகைதரும் சகலரும் 14 நாட்கள் கட்டாயம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை பிரஜைகள், இரட்டை குடியுரிமைகளைக் கொண்டோர், சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டுப் பிரஜைகள் மற்றும் இராஜதந்திர பணியாளர்கள் உட்பட இலங்கைக்கு வரும் அனைத்து பயணிகளுக்கும் இது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. (நி-4)

## 24 மணிநேரத்தில் 435 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்டுள்ள கொவிட்-19 தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறியமைக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 435 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் குறித்த குற்றச்சாட்டுக்காக மொத்தம் 8,299 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 100 | 100 |
| தக்காளி | 140 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 80 | 50 |
| கோவா | 100 | 120 | 100 | 120 |
| கரட் | 140 | 160 | 120 | 200 |
| பூசணி | 40 | 50 | 40 | 40 |
| புடோல் | 80 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 260 | 200 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 80 | 95 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 200 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 40 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 140 | 140 |
| பயற்றங்காய் | 120 | 160 | 80 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 350 | 500 | 300 | 500 |
| போஞ்சி | 120 | 200 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 80 | 80 |
| கீரை – 1 பிடி | 60 | 60 | 30 | 40 |
| தேசிக்காய் | 140 | 130 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 40 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 300 | -- | -- | 280 |
| முள்ளங்கி | 80 | 70 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | -- | 80 | -- |



# சிறுவர் அரங்கம்

## பிரிவு

பிரிவுத் துன்பம் எல்லை மீறியது. அக்பர் வீரர்களை அனுப்பிஎல்லா திசைகளிலும் பீர்பாலைத்தேடச்சொன்னார்.

வீரர்கள் பக்கத்திலுள்ள ஊர்களுக்கெல்லாம் சென்று தேடினார். ஆனால், உள்ளே இருந்தவரை வெளியே தேடினால் எப்படிக் கிடைப்பார்? ஆம்! பீர்பால் தலைநகரான ஆக்ராவில்தான் ஒளிந்திருந்தார்.


சந்துபொந்துகள் நிறைந்த கினாரி பஜார் பகுதியில் புரோகிதர் வேடத்தில் இருந்தார். தேடுவதற்கு அனுப் பப்பட்ட வீரர்கள், வெறுங்கையுடன் அக்பரிடம் திரும்பினர்.

"பீர்பால் சாஹிப் இருக்கக்கூடிய இடங்களிலும் தேடிப்பார்த்தோம். அவர் இருக்கமாட்டார் என்று நினைத்த இடங்களையும் விட்டுவிடாமல் அங்கெல்லாமும் தேடினோம்.

மந்திரவாதிகளிடம் வெற்றிலையில் மை தடவி மந்திர திருஷ்டியால் அவர் இருக்குமிடம் கண்டுபிடிக்கச் சொனனோம். அதுவும் பலன் தரவில்லை," என்று வருத்தத்துடன் தெரிவித்தனர்.

அக்பர் அவர்கள்ள அனுப்பிவிட்டு, யோசனையில் ஆழ்ந்தார். காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க இப்போது உள்ளதைப் போல் செய்தித்தாள், தொலைக்காட்சி ஆகிய வசதிகள் அக்பர் காலத்தில் இருக்கவில்லை.

பக்கத்து ஊர்களில் பீர்பால் இல்லை என்பது வீரர்கள் கொண்டுவந்த தகவலால் தெளிவாகி விட்டது.




அவையெல்லாம் சிறு ஊர்கள், புதிதாக யாராவது வந்தால் தெரிந்து போய்விடும். ஆகவே பீர்பால் மாநகரான ஆக்ராவில்தான் எங்கேயோ ஒளிந்து வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும் என்ற முடிவிற்கு அக்பர் வந்தார்.

ஒளிந்திருக்கும் மிருகங்களை வெளியே கிளப்ப ஒலி எழுப்புவதைப் போல், மறைவிடத்திலிருந்து பீர்பாலைக் கிளப்ப வைக்க அக்பர் ஆட்களைக் கொண்டு தெருத் தெருவாக தண்டோரா போட்டு ஓர் அறிவிப்புச் செய்வித்தார்.

அது ஒரு புதிரான அறிவிப்பு. புதிர்களை விடுவிப்பது பீர்பாலுக்கு பிடித்தமான விடயம் என்று அக்பருக்குத் தெரியும். ஆகவே தன் அறிவிப்பு பீர்பாலுக்கு எட்டினால் அதற்கான பதிலை பீர்பால் அனுப்புவார். அதன் மூலம் அவர் மறைந்துள்ள இடம் தெரிந்து விடும் என, கருதினார் அக்பர்.

(தொடரும்)

# மகாபாரதம்





கிருஷ்ணர் அஸ்தினாபுரம் செல்லப் புறப்பட்டார். இதை அறிந்த திருதராட்டினன் மகிழ்வது போல நடித்தான். விதுரரை அழைத்து "தேர், யானை, குதிரை ஆகியவற்றையும் இரத்தினக் குவியல்களையும் பகவானுக்கு பரிசுப் பொருட்களாக வழங்க வேண்டும்.

என் நூறு புத்திரர்களும் கண்ணனை எதிர் கொண்டு அழைக்க வேண்டும். வரவேற்பு பிரமாதமாக இருக்க வேண்டும்" என்றெல்லாம் கூறினான். அவன் கருத்தை அறிந்த விதுரர் "இத்தகைய ஆடம்பரங்களை கண்ணன் விரும்ப மாட்டார்" என்றான்.

அஸ்தினாபுரத்தை அடைந்த கண்ணனும் இவ் வரவேற்புகளை பொருட்படுத்தாது திருதராட்டினன் மாளிகைக்கு சென்றார். விதுரரின் வீட்டிற்குச் சென்றார். அங்கிருந்த குந்தி அவரை வரவேற்றாள். துரியோதனன் கண்ணனை தன் மாளிகைக்கு விருந்தினராக வந்து மகிழ்விக்குமாறு வேண்டினான். ஆனால் கண்ணன் சம்மதிக்கவில்லை.

காரியம் நிறைவேறுவதற்குள் தூதுவர் பகைவர் வீட்டில் உண்பது வழக்கமில்லை என்றார்.

கௌரவர், பாண்டவர் இருவருக்கும் நடுநாயகமாக விளங்கும் தாங்கள் ஏன் எங்களை பகைவராய் எண்ணுகிறீர்கள்? என துரியோதனன் கேட்டான்.

அதற்கு கண்ணன் "பாண்டவர்கள் தர்மத்தை போற்றி நடக்கிறார்கள். நீ..அந்த தர்மவான்களை அழிக்க எண்ணுகிறாய்.

எப்போதும் தர்மத்தின் சார்பில் இருப்பவன். தர்மத்திற்கு எதிரி எனக்கும் எதிரி. அந்த வகையில் நீயும் எனக்கு பகைவன். ஆகவே உன் விருந்தை நான் ஏற்க மாட்டேன்" என்றார்.

துரியோதனனின் விருந்தை கண்ணன் மறுத்தாலும் அவனது அவைக்கு தூதுவராய் சென்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிறிய விஷயத்தில் நியாயம் தவறுபவன், பெரிய விஷயத்திலும் தொடருவான்!*
*– இயேசுநாதர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மே 18 நினைவேந்தலுக்கு மதச் சாயம் பூச வேண்டாம்

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எங்கள் உறவுகளை இதயத்தால் பூசிக்கின்ற நாள்.

2009ஆம் ஆண்டு மே 18 வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் போர் உச்சமடைந்த நாள். எங்கள் உறவுகள் கொன்றொழிக்கப்பட்ட நாள்.

இந்த நாள், உலகத்தில் இருக்கக்கூடிய அத்தனை தமிழ் உறவுகளும் நினைவேந்த வேண்டிய நாள்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் உயிரிழந்த எங்கள் உறவுகளை நினைவேந்துவது எங்களின் உரிமை.

உலகெங்குமுள்ள தமிழ் மக்கள் நினைவுகூர வேண்டிய மே 18, திட்டமிடப்பட்ட பொது ஏற்பாட்டின் கீழ் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

வன்னிப் பெருநிலப்பரப்பில் உயிரிழந்த எங்கள் தமிழ் உறவுகளை தமிழ் இனத்தின் பேரால் நினைவுகூருவோம்.

இதைவிடுத்து, மே 18 நினைவேந்தலுக்கு சமயச் சாயத்தைப் பூசி விடுகின்ற அநாகரிகச் செயலை எவரும் செய்துவிடக் கூடாது.

அத்தகைய நகர்வுகள் – போக்குகள் பண்புடைமையின் பாற்பட்டதல்ல.

வன்னிப் பெருநிலப்பரப்பில் உயிரிழந்தவர்களை சமய ரீதியில் சைவ சமயத்தவர்களாக – கத்தோலிக்க மதத்தவர்களாகப் பிரிப்பது சிறுமைத்தனமாகும்.

அவர்கள் அத்தனை பேரும் தமிழ் மக்கள். அன்னை தமிழின் அருமந்த பிள்ளைகள்.

தமிழ் இனத்தின் வாழ்வுக்காகத் தங்கள் உயிர்களை அர்ப்பணம் செய்தவர்கள்.

எனவே அவர்களை தமிழால் – தமிழ் இனத்தின் பேரால் – அன்னை தமிழின் பிள்ளைகள் என்ற உறவால் – எங்கள் உடன் பிறப்புகள் என்ற உரிமையால் அவர்களை நினைவுகூருவோம்.

இதற்கான ஏற்பாடுகளை அதற்கென உருவாக்கப்பட்ட அமைப்பு செய்தாக வேண்டும்.

அதிலும் மதச் சமத்துவம் பின்பற்றப்படுவது அவசியமாகும்.

தவிர, மே 18 நினைவேந்தல் தொடர்பில் யார் அறிக்கைகளை வெளியிட்டாலும் அந்த அறிக்கைகள் நினைவேந்தலுக்கான பொது அமைப்பினூடாக வெளியிடப்படுவதே பொருத்தமானது.

இதைவிடுத்து ஆளுக்கு ஆள், சமயத்துக்குச் சமயம் என ஒவ்வொரு தரப்பும் தங்கள் பாட்டில் அறிக்கைகளை வெளியிடுவது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

இதுவிடயத்தில் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்குப் பொறுப்பாக இருக்கின்ற அமைப்பு கவனம் செலுத்த வேண்டும்.

இதைக் கடந்து; முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒரு சமயத்தின் சார்பாக ஆக்குவதற்கு யார் முயற்சித்தாலும் அது தமிழ் இனத்துக்கும் வன்னிப் பெருநிலப்பரப்பில் உயிரிழந்த தமிழ் உறவுகளுக்கும் செய்கின்ற மிகப் பெரும் துரோகத்தனமாகும்.

எனவே எதையும் நடுநிலை நின்று, தர்மத்தின் வழியில் கருமமாற்றுக!

சமூக முடக்கல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்

# யாழ். மாவட்டத்தில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள்

(யாழ்ப்பாணம்)

நாடு தழுவியதான சமூக முடக்கல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் குறித்து மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் அறிவித்துள்ளார்.

ஊரடங்கு நேரத்தில் அத்தியாவசிய சேவைகள் மாத்திரம் இடம்பெற அனுமதி அளிக்கப்படும் என யாழ் .மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் கொரோனா நிலைமை சற்று தீவிரமடைந்த நிலை காணப்படுகின்றது. இதேவேளையில் நாடுபூராகவும் நாளை 13 ஆம் திகதி நள்ளிரவு முதல் 17ஆம் திகதி அதிகாலை வரை ஊரடங்குச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக கொரோனா ஒழிப்பு மத்திய நிலையத்தினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தியாவசியமான தேவைகளுக்கு மட்டும் வீடுகளில் இருந்து ஒருவர் வெளியில் செல்லலாம் என மத்திய நிலையத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் வாகனங்கள் மாத்திரம் வீதிகளில் பயணிக்க அனுமதிக்கப்படும். அந்தவகையில் உணவுப்பொருட்கள், எரிபொருள், காஸ் மற்றும் விவசாய மீன்பிடி உற்பத்திப் பொருட்கள் அடங்கலான வாகனங்கள் மாத்திரம் பயணிப் பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஊரடங்கு நேரத்தில் வீட்டில் இருந்து வெளியே யாரும் பயணிக்க வேண்டியிருந்தால் வழமைபோன்று ஊரடங்கு நேர நடைமுறை போன்று அவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையம் சென்று தங்களுடைய அனுமதியினைப் பெற்று பயணிக்க முடியும்.

அதேவேளை அத்தியாவசிய சேவை தவிர்ந்த ஏனையோர் பயணிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். பொது மக்கள் சுகாதார நடைமுறையினையும் அரசாங்கத்தினுடைய சுகாதார வழிகாட்டல்களையும் பின்பற்றி தற்போது நாட்டில் தீவிரமாகப் பரவி வரும் தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு முன்வர வேண்டும்.

அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் வெளிமாகாணங்களுக்கான பயணங்களில் ஈடுபடுவோர் தமது வாகன இலக்கம், சாரதி, நடத்துனர் பெயர் விவரங்கள் அடங்கலான விபரங்களை பிரதேச செயலர் ஊடாக உரிய முறையில் மின்னஞ்சல் ஊடாக எமக்கு விண்ணப்பித்தால் அதனை நாங்கள் மின்னஞ்சல் ஊடாக மாகாணங்களுக்கு இடையில் உள்ள காவலரண்களுக்கு அந்த மின்னஞ்சல்களை அனுப்பி தமது பயணத்தினை இலகுவாக்க கூடியதாக இருக்கும்.

அத்துடன் விவசாய மீன்பிடி உற்பத்தி பொருட் போக்குவரத்தில் ஈடுபடுவோர் குறித்த திணைக்களங்களின் அனுமதியினைப் பெற்று உரியவாறு விண்ணப்பிக்குமிடத்து அதற்குரிய அனுமதிகளும் இலகுவாக பெற்றுக் கொடுக்க முடியும்.

எனவே இந்த ஊரடங்கு நிலைமையில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர் தமக்குரிய அனுமதியினைப் பெற்றுக் கொள்வது தமது பயணங்களில் போது இலகுபடுத்தும் என்பதோடு குறித்த பயணங்களின் போதும் சுகாதார நடைமுறை ஊரடங்கு நடைமுறையையும் தவறாது பின்பற்றி செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-03.18.33)

வவுணதீவு பொலிஸ் நிலையத்தில்

# 12 பொலிஸாருக்கு கொரோனா தொற்று

## பொலிஸ் நிலையம் பூட்டப்பட்டது 32 பொலிஸார் தனிமைப்படுத்தலில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 12 பொலிஸாருக்கு கோவிட் தொற்று உறுதியையடுத்து பொலிஸ் நிலையம் தற்காலிகமாகப் பூட்டப்பட்டுள்ளதுடன், 32 பொலிஸார் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் 37 பொலிஸாருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இவர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த பொலிஸ் நிலையத்தில் 50 பொலிஸார் கடமையாற்றி வருகின்றனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்டிஜன் பரிசோதனையில் அங்கு கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று பொலிஸ் நிலையத்தில் 34 பொலிஸாருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் ஒரு சப் இன்பெக்டர், ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட 12 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் 32 பொலிஸார் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், பொலிஸ் நிலையம் தற்காலிகமாகப் பூட்டப்பட்டுள்ளது.

வவுணதீவு பொது மக்கள் தமது பொலிஸ் சேவையைத் தற்காலிகமாக ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்தில் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வுவுணதீவு பொலிஸ் நிலையத்திற்குக் கிருமி நாசினிகளைத் தெளித்துச் சுத்தப்படுத்திய பின்னர் பொலிஸ் நிலையத்தைத் திறப்பதற்கான முழு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3)

# சத்திய தரிசனம்



## கடவுள்மீது ஒருமுகப்பட்ட அன்புகொள்

❖ உலகம் தற்காலிகமானது, இடர்கள், துக்கங்களால் நிரம்பியது. இந்தத் தற்காலிகமாக உலகத்தில் மனிதனுக்கு நிரந்தர சந்தோசம் கிடையாது. உலகியலான சந்தோசம் தற்காலிகமானது, ஓடி மறைவது; உலகம் தெய்வத்தின் வடிவமே என்று உணருவதில்தான் நிரந்தரமான, அழியாத ஆனந்தம் இருக்கிறது.

❖ அறியாமையின் காரணமாக மனிதன் அதைப் பொருளியல் உலகம் என நினைக்கிறான். தவறு அவனுடைய பார்வையில் இருக்கிறதேயன்றிக் கடவுளின் படைப்பில் அல்ல.

**தெய்வீகப் பார்வையை வளர்த்துக்கொள்.**

❖ நாம் பார்க்கும் பரந்த உலகம் கடவுளின் விஸ்வரூபம். நாம் உலகாயதப் பார்வை கொண்டிருப்பதால் அது நமக்கு உலகாயதமாகவே தோன்றுகிறது. ஆகவே அதை நாம் உலகாயதமாகப் பார்க்கக்கூடாது; தெய்வீக நோக்கில் பார்க்க வேண்டும்.

❖ பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்துமே அணுக்களின் வெவ்வேறு சேர்க்கையில் உண்டானவை. கடவுள் பிரபஞ்சத்தின் ஒவ்வோர் அணுவுள்ளும் வியாபித்திருக்கிறார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் உருமாறிய வைரஸ்

# 44 நாடுகளுக்கு பரவியது

## உலக சுகாதார ஸ்தாபனம் தகவல்

(டில்லி)

**இந்தியாவில் பரவலாகக் காணப்படும் உருமாறிய கொரோனா வைரஸ் உலகளாவிய ரீதியில் 44 நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**


இந்தியாவில் கொரோனா தொற்று வேகமாகப் பரவுவதற்கு முக்கிய காரணம் பி.1.617 எனும் உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ் தான். கடந்த ஒக்டோபர் மாதம் முதன் முதலில் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வைரஸ்தான் தற்போது உலக சுகாதார ஸ்தாபனத்தின் 6 மண்டலங்களில் உள்ள 44 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை 4,500 மாதிரிகளில் கண்டறியப்பட்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்தியாவைத் தவிர்த்து இந்தியாவில் உள்ள பி.1.617 உருமாறிய வைரஸ் பிரிட்டனில்தான் அதிகமாகக் கண்டறியப்பட்டுள்ளது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த வாரத்தின் தொடக்கத்தில் உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவில் பரவி வரும் பி.1.617 வகை உருமாறிய கொரோனா வைரஸ், மற்ற வைரஸ்களை விட வேகமாகப் பரவுகிறது, உருமாற்றம் அடைந்துள்ளது என்று கூறியதுடன், அதன் குணங்களையும் பட்டியலிட்டு, கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## வாழ்க்கையை ஆரம்பித்த 'டீ'க்கடையிலே அமைச்சர் பணியையும் ஆரம்பித்த மஸ்தான்



(சென்னை)

செஞ்சி தொகுதியில் நேற்று முன்தினம் முதன் முதலாகத் தன் பணியைத் தொடங்கிய கே.எஸ்.மஸ்தான், மலரும் நினைவுகளாக டீக்கடையில் நின்று டீ ஆற்றிய பின்னரே அமைச்சர் பணியைத் தொடங்கியுள்ளார்.

நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி பெருவாரியான இடங்களில் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்தது. கடந்த 7 ஆம் திகதி அமைச்சரவையில் தி.மு.க. தலைவர் ஸ்டாலின் முதல்வராகப் பதவியேற்றுக்கொண்டார். அவரைத் தொடர்ந்து 33 அமைச்சர்களும் பதவியேற்றுக்கொண்டனர். விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினராக கே.எஸ்.மஸ்தான் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

செஞ்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் படித்த இவர் எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ளார். செஞ்சி பகுதி டீக்கடை ஒன்றில் வேலை செய்து தன் வாழ்க்கையைத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## நோயாளிகளின் உயிர்களை காக்க ஏற்படுத்தப்பட்ட புதிய முயற்சி

(டில்லி)

பெங்களூரில் ஒட்சிசன் பேருந்து சேவை நேற்று முதல் ஆரம்பமாகியது.



"பெங்களூரில் கொரோனா பரவல் அதிகரித்துள்ளது. அதனால் அரசு- தனியார் மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. இதன் காரணமாக புதிதாக வரும் நோயாளிகளுக்கு படுக்கை, ஒட்சிசன் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு ஒட்சிசன் பேருந்து இயக்க முடிவு செய்துள்ளோம் என கர்நாடக துணை முதலமைச்சர் தெரிவித்தார்.

அவசரமாக ஒட்சிசன் தேவைப்படும் கொரோனா நோயாளிகளுக்கு இந்த பேருந்தில் ஒட்சிசன் வழங்கப்படும். மருத்துவமனையில் படுக்கை கிடைத்ததும் அவர் அங்கு மாற்றப்படுவர். நோயாளிகளின் உயிர்களை காக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த ஏற்பாட்டை செய்துள்ளோம்.

ஒரு தொண்டு நிறுவனத்துடன் இணைந்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-4)

## கொரோனா தடுப்பு விதிமுறைகளை தாயாரிடம் அமுல்படுத்திய ஊழியர்

(டில்லி)

கொரோனா விதிமுறையை மீறி விற்பனை செய்த தாயாரிடம் இருந்து காய்கறிகளை நகராட்சி ஊழியர் ஒருவர் பறிமுதல் செய்தார். அந்த வீடியோ வலைத்தளத்தில் பரவுகிறது.

மராட்டிய மாநிலம் அமகத் நகர் மாவட்டம் பதார்டி டவுன் மெயின் பஜார் பகுதியை சேர்ந்தவர் ரஷீத் சேக் (வயது-36). இவர் பதார்டி நகராட்சியில் ஊழியராக பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில் சம்பவத்தன்று அவர் சோதனை நடத்தும் பணியில் ஈடுபட்டு இருந்தார். அப்போது, அவரது வீட்டின் அருகே அவரின் தாயார் தள்ளுவண்டியில் காய்கறி வியாபாரம் செய்து கொண்டு இருந்தார். இதைபார்த்த ரஷீத் சேக் தாயிடம் இருந்து காய்கறிகளை பறிமுதல் செய்தார். மேலும் அந்த காய்கறிகளை நகராட்சி வண்டியில் அள்ளிப்போட்டார். இந்த வீடியோ காட்சி சமூக வலைத்தளத்தில் வைரலானது.

இது குறித்து ஊழியர் ரஷீத் சேக்கிடம் கேட்டபோது, அவர் கூறுகையில், "கொரோனா தடுப்பு நடவடிக்கையாக வீதி, வீதியாக சென்று காய்கறி விற்க தடை இல்லை. ஆனால் வீதிகளில் ஓரிடத்தில் அமர்ந்தோ அல்லது கூடாரம் அமைத்தோ காய்கறி வியாபாரம் செய்ய அனுமதி இல்லை.

இது தொடர்பாக எனது தாயாரிடம் முன்கூட்டியே தெளிவாக கூறியிருந்தேன். ஆனால் அவர் விதிமுறையை மீறி தள்ளுவண்டியை ஓரிடத்தில் நிறுத்தி வியாபாரம் செய்ததால் இந்த நடவடிக்கையை எடுத்தேன்" என்றார்.

பெற்ற தாயாரிடமே காய்கறிகளை பறிமுதல் செய்து கொரோனாத் தடுப்பு விதிமுறையை அமல்படுத்திய ரஷீத் சேக்கை நகராட்சி ஆணையர் வெகுவாகப் பாராட்டினார். (நி-4)

## அரபிக் கடலில் உருவாகும் வலுவான புயல்

(டில்லி)

அரபிக் கடலில் நாளை 14 ஆம் திகதி நடப்பாண்டின் முதலாவது புயல் உருவாகவுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது குறித்து இந்திய வானிலை ஆய்வுமையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், நாளைக் காலை தென்கிழக்கு அரபிக் கடலில் குறைந்த காற்றமுத்த தாழ்வு பகுதி உருவாகும்.

இது வடக்கு, வடமேற்கு நோக்கி நகரக்கூடும். இலட்சத்தீவை ஒட்டிய பகுதிகளில் தாழ்வு பகுதி மேலும் வலுவடைய வாய்ப்புள்ளது. இதன்மூலம் இலட்சத்தீவுகள், கடலோர கேரளா, கர்நாடகா, கோவா, மகராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் பலத்த மழைவீழ்ச்சி ஏற்படும்.

அதேநேரம் எதிர்வரும் 16 ஆம் திகதி கிழக்கு மத்திய அரபிக் கடலில் வலுவடைந்து புயலாக மாற வாய்ப்புள்ளது. அதன்பின் வடக்கு, வடமேற்கு திசையில் தொடர்ந்து நகரும்.

குஜராத் மற்றும் பாகிஸ்தானுக்கு இடைப்பட்ட பகுதியில் கரையைக் கடக்கலாம். தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு அரபிக்கடல் பகுதியில் 14 ஆம் திகதிவரை மணிக்கு 50 கிலோமீற்றர் வரையில் சூறாவளி காற்று வீசும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தை பிரசவி...

பட்ட தாய் ஒருவர் குழந்தை பெற்று சில மணி நேரங்களில் உயிரிழந்த சோக சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தெல்லிப்பழையை சேர்ந்த ஜீவசுமன் மேரி சலுஜா (வயது-29) என்ற இளம் தாயே உயிரிழந்தவராவார்.

இருதய நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் 2ஆவது குழந்தையாக ஆண் குழந்தை ஒன்றை பிரசவித்த நிலையில் திடீர் சுகயீனமடைந்துள்ளார்.

உடனடியாக அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டு வைத்தியர்கள் தீவிர முயற்சி செய்தபோதும் அவர் உயிரிழந்துள்ளார். (ம-3)

## பதிவுத்...

மக்கள் நடமாட்டத்துக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில் நிகழ்வுகளுக்கான திருத்தப்பட்ட புதிய கட்டுப்பாடுகளை சுகாதார அமைச்சு வெளியிட்டிருக்கின்றது.

இதன்படி மே 31 வரை திருமண வைபவங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் திருமணப் பதிவாளர் உட்பட 15 பேருடன் பதிவுத் திருமணம் செய்ய அனுமதி வழங்கப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ம-3)

## நோன்பு...

கொண்டாடப்படவுள்ளது.

ஷவ்வால் மாதத்திற்கான தலைப் பிறை நாட்டின் எப்பகுதியிலும் தென்படவில்லை என கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் இம்முறை ரமழான் மாதம் 30 தினங்களாக பூர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய நாடு பூராகவும் உள்ள முஸ்லிம்கள் நாளை ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாட உள்ளனர். (ம-3)

## வவுனியா வளாக...

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்கள் சிலருக்கு கடந்த சில நாட்களாக கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து அவர்களுடன் தொடர்புடைய மாணவர்களிடம் நேற்று அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இப்பரிசோதனையில் 31 மாணவர்களுக்கு மேலும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.(ம-3,250,299)

## இரவு 11 மணி...

மணி முதல் அதிகாலை 4 மணி வரை நாடு முழுவதும் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும், இக்காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு எவ்வித தடையும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## யாழில் தனிமை...

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வீதிகளில் மட்டுமல்லாமல் நிறுவனங்கள், வியாபார நிலையங்களுக்குள் நேற்று சென்ற பொலிஸார் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 50 பேரைக் கைது செய்து பேருந்தில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அவர்கள் 50 பேருக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கான வழக்கு வரும் ஜூலை 21, 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் அழைக்கப்படும் என்று பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டது. (ம-3,18,33)

## மக்கள் நடமாட...

கோவிட்-19 தாக்கம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அத்தியாவசிய சேவைகள் மற்றும் உணவுப் பொருள் விநியோக நடவடிக்கைகளுக்கு இந்த தடை தாக்கம் செலுத்தாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் நாளாந்தம் இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரையிலும் நடமாட்டங்களுக்கு தடைவிதிக்கப்படும்.

குறித்த நடமாட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள காலப் பகுதியில் விமான நிலையம் செல்லவும், நோயாளர்களை இடமாற்றவும் அனுமதி வழங்கப்படும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ம-3)

## முள்ளிவாய்க்...

கல் ஒன்றை நடுகை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் நிலையில் நினைவு முற்றத்தை சூழ இராணுவம் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பதற்றமான சூழல் காணப்படுகின்றது.

2009ஆம் ஆண்டு இறுதிப்போரில் கொல்லப்பட்ட உறவுகளுடைய நினைவேந்தல் வாரம் நேற்று ஆரம்பமான நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான பொது கட்டமைப்பினால் நினைவுக் கல் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நினைவு முற்றத்தை சூழ இராணுவம் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டதால் பதற்றமான நிலை ஏற்பட்டிருந்தது. (ம-3,281)

## வடக்கை மிரட்...

யாழ்.மாவட்டத்தில் 67 பேர் உட்பட வடக்கில் 82 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ்.போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி நேற்றைய தினம் 769 பேருடைய பி.சி.ஆர் மாதிரிகள் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் 82 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

யாழ்.மாவட்டத்தில் 67 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 4 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

மேலும் வவனியா கற்பகபுரத்தை சேர்ந்த நபர் ஒருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளார்.

மற்றும் கிளிநொச்சி கிருஸ்ணபுரம் கோவிட் தடுப்பு சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுவந்த வவுனியா இறம்பைக்குளத்தைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்துள்ளார். (ம-3,33,100, 181,299,316)

## 4 மாத...

மாதங்களிற்கு முன்னர் இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன.

இவர்களை வழமைபோன்று அதிகாலை 12 மணியை தாண்டிய நிலையில் பால் ஊட்டி தாயார் நித்திரையாக்கினார்.

அதிகாலை ஒரு குழந்தையின் அசைவைக் காணாது பதற்றத்துடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற சமயம் குழந்தை உயிரிழந்திருந்ததை மருத்துவர் உறுதி செய்தார்.

பிரதீப் ஹறீனா என்ற நான்கு மாதக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

உயிரிழந்தகுழந்தையின் மரண விசாரணையை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் பிரேத பரிசோதனை மேற்கொள்ள உத்தரவிட்டார். (ம-3)

## +2,429...

யல் பிரிவு விடுத்துள்ள நாளாந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 133,527ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## சங்குப்பிட்டி...

அங்கிருந்து அகற்றுவதற்கு உயர் அரச அதிகாரிகள் தீவிரமாக முயற்சி செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றது.

சங்குப்பிட்டி பகுதியில் சுமார் 3 ஆயிரம் ஆண்டுகள் பழமையான பிள்ளையார் ஆலயம் ஒன்று இருந்ததாகவும் பின்னர் போர் காரணமாக குறித்த ஆலயம் அழிக்கப்பட்ட நிலையில் அந்த இடத்தில் சைவ சமய அமைப்புக்களால் பிள்ளையார் சிலை ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் அரசியல் தரப்புக்கள் இந்த விடயத்தில் தலையீடு செய்து பிள்ளையார் சிலையை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)


தன நிதானய
திகதி -2021.05.12
சீட்டிழுப்பு இலக்கம் - 516
P 32 51 54 69

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 12.05.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2774
J 28 33 45 70

மஹஜன சம்பத
திகதி 2021/05/12
சீட்டிழுப்பு இலக்கம் 4479
K 6 3 9 2 3 4

மெகா பவர்
திகதி 12/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0835
C 23 04 42 77 80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 12/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1119
ரிஷபம் 0 0 4 8 5 5
01498

சீட்டிழுப்பு வாரம் 075
சீட்டிழுப்பு திகதி 12.05.2021
வெற்றி இலக்கங்கள் 02 09 34
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,531,480

அத கோடிபதி
கிழமை: புதன்
சீட்டிழுப்பு இல: 1275
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 12.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 133,767,371
வெற்றி இலக்கங்கள் 51 56 70 71 N

சனிதா
கிழமை: புதன்
சீட்டிழுப்பு இல: 3605
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 12.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,772,863
வெற்றி இலக்கங்கள் 28 43 64 73 G

ராசி
சுப்பர் ஜக்பொட் 26,54,005/=
திகதி: 12.05.2021
வெற்றி வாரம்: 3156
வர்ணம்: பச்சை
வெற்றி இலக்கங்கள் 29 40 43 59 மேடம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,879,660

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1449
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 12/05/2021
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் T 17 24 49 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் 55,939,433/=

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1757
சீட்டிழுப்பு திகதி 12.05.2021
வெற்றி இலக்கங்கள் 08 37 61 67 C
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 25,265,076
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபடைந்த வைரஸ் தொற்றுடன் சமூகத்தில் பலர் நடமாடுகின்றார்கள்

## தொற்று நோயியல் நிபுணர் சுதத் சமரவீர எச்சரிக்கை



(கொழும்பு)

**திரிபடைந்த ஆபத்தான வைரஸ் தொற்றுடன் சமூகத்தில் பலர் நடமாடுகிறார்கள் என சுகாதார அமைச்சின் தலைமை தொற்றுநோயியல் நிபுணர் சுதத் சமரவீர எச்சரித்துள்ளார்.**

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், புதிய திரிபடைந்த வைரஸ் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் சமூகத்திற்குள் காணப்படலாம் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்குள் வருபவர்களை சோதனையிட்டு மாதிரிகளை பெறும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.


புதிய திரிபடைந்த வைரஸினால் ஆரம்பகட்ட பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள இன்னமும் அடையாளம் காணப்படாத சிலர் சமூகத்திற்குள் நடமாடும் சாத்தியக்கூறுகள் உள்ளன என சுதத்சமரவீர தெரிவித்துள்ளார். (ம-03)

## இராணுவத்தின் முற்றுகைக்குள் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி

### செய்தியாளர்களுக்கு அனுமதி மறுப்பு

(முள்ளிவாய்க்கால் )

**முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைந்துள்ள நினைவு முற்றத்தின் நான்கு பகுதிகளிலும் இராணுவம் நிறுத்தப்பட்டு அப்பகுதிக்குள் நுழைய இராணுவத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.**



பிரதான வீதியிலிருந்து நினைவு முற்றத்துக்கு செல்லும் வீதிகளில் ஆயுதம் தாங்கிய படையினர் நிறுத்தப்பட்டு உள்ளே எவரும் செல்லமுடியாது தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு முள்ளிவாய்க்கால் கிராமத்துக்கு செல்வோர் வேறு பாதைகளால் செல்லுமாறு இராணுவத்தால் பணிக்கப்படுகின்றார்கள்.

அப்பகுதிக்குள் செய்தி அறிக்கையிடலுக்காக சென்ற உள்ளூர் செய்தியாளர்களும் அனுமதி இராணுவத்தால் மறுக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (ம-03)

## இலக்கினை எட்டும்வரை தொடர்ந்து பயணிப்போம்

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு

தமிழ் இனப்படுகொலை நீதிக்கான ஒரு தசாப்தத்தைக் கடந்திருந்தாலும் இலக்கினை எட்டும் வரைக்கும் தொடர்ந்து பயணிப்போம் என முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு தெரிவித்துள்ளது

மே 18 தமிழ் இனப்படுகொலை நினைவு நாள் தொடர்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ் இனப்படுகொலை நினைவுநாள் முள்ளிவாய்க்கால் தமிழர் அடக்கு முறைக்கெதிரான எழுச்சி மையம். அடக்குமுறைக்கெதிரான விடுதலைப் போராட்டங்கள் அணுகுமுறை சார்ந்து பின்னடைவுகளைச் சந்திக்கின்றனவே தவிர விடுதலை பெறும் வரை ஓய்ந்துவிடுவதில்லை என விடுதலைப் போராட்ட வரலாற்றியல் எமக்குக் கற்பித்திருக்கின்றது. முள்ளிவாய்க்காலும் இதற்கு விதிவிலக்கல்ல. முள்ளிவாய்க்கால் நினைவுதினம் கடந்த காலம் தொடர்பானது மட்டுமல்ல எதிர்கால அடக்குமுறைக்கெதிரான இயங்கியல் தொடர்பானது.

கொத்துக் கொத்தாய் இறுதிப் போரில் கொல்லப்பட்ட எமது இரத்த உறவுகளை அவர்களது கனவுகளைச் சுமந்து கனத்து நிற்கின்றது முள்ளிவாய்க்கால் மண். மே 18 நினைவேந்தல் தமிழ் இனப்படுகொலை நீதிக்கான ஒரு தசாப்தத்தைக் கடந்திருந்தாலும் இலக்கினை எட்டும் வரைக்கும் தொடர்ந்து பயணிப்போம் என்ற வாஞ்சை ஈழத் தமிழர்களை ஒருங்கிணைக்கின்றது. எமது வளங்களை ஒன்றிணைத்து கடந்த கால பட்டறிவிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு புதிய உத்திகளைக் கையாண்டு எதிர்காலத்தை எதிர்கொள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அழைப்பு விடுக்கின்றது என்றுள்ளது.

(ம-03,33,281,299)

## உயர்தர பரீட்சையில் நூறு வீத சித்தி பூநகரி விநாசியோடை ம.வி சாதனை

(பூநகரி)

2020ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களும் சித்தியடைந்ததால் பூநகரி விநாசியோடை மகா வித்தியாலம் சாதனைபடைத்துள்ளது.

2018ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு நடத்துவதற்கான அனுமதியை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு குறித்த பாடசாலைக்கு வழங்கியிருந்தது.

2018ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரத்தில் பயின்ற மாணவர்களே 2020ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் தோற்றி அனைவரும சித்தியடைந்து சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)


**பணியாளர்கள் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர், கொத்து றொட்டி போடுபவர், பிறைட்றைஸ் தயாரிப்பாளர், உணவு பரிமாறுபவர்(வெயிற்றர்) போன்ற பணிகள் செய்யக்கூடிய பணியாளர்கள் தேவை.

தகுதியுடையோர் நேரில் வருகை தரவும்.

(C-2147)

தொடர்பு

077 649 1027

077 940 0963

ONLINE SEMINAR தமிழ் மொழியிலான கலந்துரையாடல்

STUDY MEDICINE IN CHINA

on 15th MAY 2021 at 10.00am

மேலதிக தொடர்புகளுக்கு Dr. தேவா

Mob : 076 764 6888 Tel : 011 588 2896

(6847)

Authorised agent in Sri Lanka

BYF EDUCATION (PVT) LTD

2C, 1/2, Charles Place, Dehiwala, Sri Lanka

www.byfedulk.com

**காணி விற்பனை**

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட ( யாழ். நகரில் இருந்து 1 1/2 Km தூரம் ) ஓட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கையில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

( 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)

1 பரப்பின் விலை 6 இலட்சம்.

(6879)

077 468 3354

077 288 0152

074 07[illegible] 4204

அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/=

070 3305500

077 888 9388

(C-2134)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை

பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை

மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2133)

0768226240 DHL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.